ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:



பரமகாருணிகரான பெரியவாச்சான்பிள்ளை
அருளிச்செய்த
சதுச்ச்லோகீ வ்யாக்யானம்

श्रीमत्कृष्णसमाह्वाय नमो यामुनसूनवे।
यत्कटाक्षैकलक्ष्याणां सुलभः श्रीधरस्सदा॥

ஸ்ரீமத்க்ருஷ்ணஸமாஹ்வாய நமோ யாமுநஸூநவே।
யத்கடாக்ஷைக லக்ஷ்யாணாம் ஸுலப4: ஸ்ரீத4ரஸ்ஸதா3॥

அவதாரிகை:—நம் த3ர்ஶனத்துக்கு ப்ரதா4நம் ரஹஸ்ய த்ரயமென்றும், ஶ்லோகத்3வய மென்றும், சதுஶ்ஶ்லோகீ என்றும் நம் ஆசார்யர்கள் அருளிச்செய்துபோருவர்கள். இதில் திருமந்த்ரத்தாலே ஸ்வரூபமும் ஸ்வரூபாநுரூபமான புருஷார்த்த2மும் ப்ரதிபாதி3க்கப்படுகையாலே, அந்தப் புருஷார்த்த2த்துக்கு உபாயசிந்தை பண்ணுகிறது சதுஶ் ஶ்லோகியாலும், ஶ்லோகத்3வயத்தாலும். இவ்விடத்தில் சதுஶ்ஶ்லோகியால் செய்கிறது என்னென்றால்: நம்பெருமாளுக்கு தே3வதாந்தரங்களைக்காட்டிலும் வாசி மோக்ஷ ப்ரத3த்வம், ஜக3த்காரணத்வம் என்கிற இவை; இவைதான் எத்தாலே வந்ததென்றால்; ஶ்ரிய:பதித்வநாராயணத்வங்களாலே வந்த பரத்வாதி3கு3ணங்களாலே என்கை. வேதா3ர்த்த2மாயிருந்துள்ள அர்த்த2பஞ்சகத்துக்கு விவரணமான ஸ்ரீவிஷ்ணுபுராணத்திற்கு.........* பர்யாலோசனம் பண்ணியிருந்துள்ள ஆளவந்தார் ஸ்தோத்ரீகரித்து, ஶ்ரிய:பதித்வநிப3ந்த4நமான ஸௌலப்4யாதி3கு3ணங்களை அநுப4விக்கிறார் சதுஶ்ஶ்லோகியாலே. இதில் முதல் ஶ்லோகத்தால் பிராட்டியினுடைய நாராயண ஸம்ப3ந்த4நிப3ந்த4நமான பரத்வம் ப்ரதிபாதி3க்கப்படுகிறது. இரண்டாம் ஶ்லோகத்

... * இக்குறியுள்ளவிடங்களில் சில பத3ங்கள் விட்டுப்போயிருக்கின்றன.

ஆளவந்தார் அருளிச்செய்த சதுச்ச்லோகீ

कान्तस्ते पुरुषोत्तमः फणिपतिः शय्याऽऽसनं वाहनं
वेदात्मा विहगेश्वरो यवनिका माया जगन्मोहिनी।
ब्रह्मेशादिसुरव्रजस्सदयितस्त्वद्दासदासीगणः
श्रीरित्येव च नाम ते भगवति ब्रूमः कथं त्वां वयम्॥१॥

1. காந்தஸ் தே புருஷோத்தம:
பூணிபதிஶ் ஶய்யாऽऽஸநம் வாஹநம்
வேதாத்மா விஹகேஶ்வரோ
யவநிகா மாயா ஜகந்மோஹிநீ।
ப்ரஹ்மேஶாதிஸுரவ்ரஜஸ்
ஸதயிதஸ் த்வத்தாஸதாஸீகண:
ஶ்ரீரித்யேவ ச நாம தே பகவதி
ப்ரூம: கதம் த்வாம் வயம்॥

தாலே அந்தப் பரத்வத்தை அனுபவித்துக்கொண்டு பிராட்டியுடைய புருஷகாரத்வம் சொல்லப்படுகிறது. மூன்றும் ஶ்லோகத்தாலே இப்படிக்கொத்த ஸௌலப்யாதி குணங்களையுடைய பெரிய பிராட்டியாருக்கு ஜகத் காரணத்வத்திலும் அந்தர்பாவமுண்டு என்னுமிடத்தைச் சொல்லி உபாயகீர்த்தனம் பண்ணப்படுகிறது. நாலாம் ஶ்லோகத்தாலே கீழ்ச்சொன்ன உபாய.........* படுவதாயிருந்துள்ள பலஸ்வரூபம் நிரூபிக்கப்படுகிறது.

1. பதவுரை:— பகவதி — கல்யாணகுணங்களால் நிறைந்தவளே!, புருஷோத்தம:—புருஷோத்தமனான பகவான், தே—உனக்கு, காந்த:—பிரியனான கணவன்; பூணிபதி:—நாகங்களுக்கு அரசனான ஆதிஶேஷன், ஶய்யா—படுக்கை; வேதாத்மா—வேதத்தை ஶரீரமாக உடையவனும், விஹகேஶ்வர:—புள்ளரையனுமான பெரியதிருவடி, ஆஸநம் வாஹநம்—ஆஸனமாகவும், வாஹனமாகவுமிருப்பவன்; ஜகந்மோஹிநீ—உலகத்தை மோஹிக்கச்செய்வதான,

மாயா—ப்ரக்ருதி, **யவநிகா**—(உனக்கு) முகத்திரையாயிருக்கிறது; **ஸத்3யித:**—தங்களுடைய மனைவிமாருடன் கூடிய, **ப்3ரஹ்மேஶாதி3ஸுரவ்ரஜ:**—பிரமன், சிவன் முதலிய தே3வ ஸமூஹம், **த்வத்3தா3ஸதா3ஸீக3ண:**—உன்னுடைய தா3ஸ க3ணமாகவும், தா3ஸீக3ணமாகவும் இருக்கிறது; **தே நாம ச**—உன்னுடைய திருநாமமும், **ஶ்ரீ: இதி ஏவ**—'ஶ்ரீ:' என்பதேயாயிருக்கிறது; **த்வாம்**—(இப்படிப்பட்ட பெருமைகள் பொருந்திய) உன்னை, **வயம்**—(அறிவிலிகளான) நாங்கள், **கத2ம் ப்3ரூம:**—எப்படிச் சொல்லுவோம்?

வ்யா:— **(காந்தஸ்தே புருஷோத்தம:)** பிராட்டியை நிரூபிக்கும்போது எம்பெருமானுடைய ஸம்ப3ந்த4நிப3ந்த4ந நிரூபணம் பண்ணவேணும். இவனையும் இவளுடைய ஸம்ப3ந்த4த்தாலே என்றும் நிரூபிக்கவேண்டும். அதெங்ஙனே? என்னில்: 1. "**कः श्रीः श्रियः**" (க: ஶ்ரீ: ஶ்ரிய:) என்றும், 2. "**श्रियःश्रियं भक्तजनैकजीवितं**" (ஶ்ரிய: ஶ்ரியம் ப4க்தஜநைகஜீவிதம்) என்றும், a "திருவுக்கும் திருவாகிய செல்வா" என்றும், b "என் திருமகள் சேர்மார்வனே என்னும்" என்றும் சொல்லுகையாலே. பிராட்டியை நிரூபிக்கும்போதும் "காந்தஸ்தே புருஷோத்தம:" என்னும்படியாயிறே இருப்பது. "ப4ர்த்தா தே புருஷோத்தம:" என்னாதே, "காந்தஸ்தே புருஷோத்தம:" என்பானென்? என்றால்: 3. "**राघवोऽर्हति वैदेहीं तं चेयमसितेक्षणा**" (ராக4வோऽர்ஹதி வைதே3ஹீம் தம் சேயமஸிதேக்ஷணா) என்றும், 4. "**भगवन्नारायणाभिमतानुरूपस्वरूपरूपगुणविभवैश्वर्यशीलाद्यनवधिकातिशयाऽ-सङ्ख्येयकल्याणगुणगणां**" (ப4க3வந்நாராயணாபி4மதாநுரூபஸ்வரூபரூப கு3ண விப4வைஶ்வர்ய ஶீலாத்3யநவதி4காதிஶயாऽஸங்க்2யேயகல்யாணகு3ணக3ணாம்) என்றும், 5. "**श्रीवल्लभ**" (ஶ்ரீவல்லப4) என்றும், 6. "**भोगोपोद्घातकेलीचुलकितभगवद्वैश्व-रूप्यानुभावा**" (போ4கோ3போத்3கா4தகேளீசுளகித ப4க3வத்3வைஶ்வரூப்யாநுபா4வா) என்றும், c 'உனக்கேற்கும்

a பெரியதிருமொழி 7-7-1. b திருவாய் 7-2-9. c திருவாய் 10-10-6.

கோலமலர்ப்பாவைக்கு அன்பாகிய என் அன்பேயோ!'' என்றும், a ''பித்தர் பனி மலர்மேல் பாவைக்கு'' என்றும் ப்ரயோக3ம் பண்ணுகிறார்களிறே.

''ஹரி:'' என்னுதல், ''விஷ்ணு:'' என்னுதல் செய்யாதே ''புருஷோத்தம:'' என்பானென்? என்றால்: 7. **''द्वाविमौ पुरुषौ लोके क्षरश्चाक्षर एव च। क्षरस्सर्वाणि भूतानि कूटस्थोऽक्षर उच्यते॥ उत्तमः पुरुषस्त्वन्यः परमात्मेत्युदाहृतः। यो लोकत्रयमाविश्य बिभर्त्यव्यय ईश्वरः॥ यस्मात्क्षरं''** (த்3வாவிமௌ புருஷௌ லோகே க்ஷரஶ்சாக்ஷர ஏவ ச। க்ஷரஸ் ஸர்வாணி பூ4தாநி கூடஸ்தோ2ऽக்ஷர உச்யதே॥ உத்தம: புருஷஸ்த்வந்ய: பரமாத்மேத்யுதா3ஹ்ருத:। யோ லோகத்ரயமாவிஶ்ய பி3ப4ர்த்யவ்யய ஈஶ்வர:॥ யஸ்மாத் க்ஷரம்) இத்யாதி3; ''அசித்தானது, ஸ்வரூபாந்யதா2பா4வயுக்தமாயிருக்கும்; சித்தானது ஸ்வபா4வாந்யதா2பா4வயுக்தமாயிருக்கும்; ஆக, உப4யாந்யதா2பா4வரஹிதன் ஈஶ்வரன் என்று கொண்டு, தனக்கு விபூ4திபூ4தமான சேதநாசேதந விலக்ஷணனென்றிட்டு 'புருஷோத்தம:' என்கிறதன்றோ'' என்கிறார்.

(**ப3ணிபதிஶ் ஶய்யா**) ஒரு ராஜாவுக்கு அபி4மதையாயிருப்பாளொருத்தி, கண்டபோது ரஸிப்பதித்தனையொழிய ஒரு படுக்கையில் ஏறப்பெறுதேயாய்த்து இருப்பது. அங்ஙனன்றிக்கே, 4. ''**भगवन्नारायणाभिमतानुरूपस्वरूपरूप**'' (ப4க3வந்நாராயணாபி4மதாநுரூபஸ்வரூபரூப), என்றும், b ''உனக்கேற்கும் கோலமலர்ப்பாவை'' என்றும், 3. ''**राघवोऽर्हति वैदेहीं**'' (ராக4வோऽர்ஹதி வைதே3ஹீம்) என்றும் இப்படி ப்ரமாணம் உண்டாகையாலே கேவலம் அபி4மதையான மாத்ரமன்றிக்கே, அநுரூபையுமாயிருக்கையாலே அவனுக்கான படுக்கை இவளுக்கும் ப்ராப்தமென்கிறார். (**ப3ணிபதி:**) என்கையாலே, 8. ''**अकारेणोच्यते विष्णुस्सर्व-**

---

a திருநெடுந்தாண்டகம் 18. b திருவாய் 10-10-6.

लोकेश्वरो हरिः। उद्धृता विष्णुना लक्ष्मीरुकारेणोच्यते सदा॥ मकारस्तु तयोर्दास इति प्रणवलक्षणम्॥" (அகாரேணேச்யதே விஷ்ணுஸ் ஸர்வலோகேஶ்வரோ ஹரி:। உத்₃த்₄ருதா விஷ்ணுநா லக்ஷ்மீருகாரேணேச்யதே ஸதா₃॥ மகாரஸ்து தயோர் தா₃ஸ இதி ப்ரணவலக்ஷணம்॥), 9. "भवांस्तु सह वैदेह्या गिरिसानुषु रंस्यते। अहं सर्वं करिष्यामि" (ப₄வாம்ஸ்து ஸஹ வைதே₃ஹ்யா கி₃ரிஸாநுஷு ரம்ஸ்யதே। அஹம் ஸர்வம் கரிஷ்யாமி) என்று சொல்லுகிறபடியே ஆத்மவஸ்துவுக்கு ஒரு மிது₂நஶேஷத்வம் பரமபுருஷார்த்த₂மாகையாலே, இங்கும் வாஸுகிதக்ஷகப்ரப்₄ருதிகளான அஷ்டமஹா நாகங்களுக்குப் *பரிப்₃ருட₄னாய், ஶேஷபூ₄தருக்கும் தலையா யிருந்துள்ள திருவனந்தாழ்வான், இருக்கும்போது உன் திருப்படுக்கை என்கிறார்.

(ஆஸநம் வாஹநம் வேத₃ாத்மா விஹகே₃ஶ்வர:) 10. "सुपर्णोऽसि गरुत्मान् त्रिवृत्ते शिरो गायत्रं चक्षुः स्तोम आत्मा साम ते तनूर्वामदेव्यं बृहद्रथन्तरे पक्षौ यज्ञा यज्ञियं पुच्छं छन्दांस्यङ्गानि धिष्णियाः शफा यजूंषि नाम" (ஸுபர்ணோऽஸி க₃ருத்மாந் த்ரிவ்ருத்தே ஶிரோ கா₃யத்ரம் சக்ஷு: ஸ்தோம ஆத்மா ஸாம தே தநூர் வாமதே₃வ்யம் ப்₃ருஹத்₃ ரத₂ந்தரே பக்ஷௌ யஜ்ஞா யஜ்ஞியம் புச்ச₂ம் ச₂ந்த₃ாம்ஸ்யங்க₃ாநி தி₄ஷ்ணியாஶ்ஶபா₂ யஜூம்ஷி நாம) என்கிறபடியே நாக₃ஜாதிகளுக்கு நாயகனை அநந்தன் திருப்படுக்கையானாப்போலே, இங்கும் வேத₃மயனாய் பறவைகளுக்கு ஆத₄ாரனாயிருந்துள்ள பெரிய திருவடி இவளுக்கு ஆஸநவாஹனங்கள் என்கிறார். அபி₄மதையானால் படுக்கையில் அணைக்க ப்ராப்தமா யிருக்கும்; ஏகாஸநத்திற்கொண்டு இருக்க யோக்₃யை யன்றிக்கேயாய்த்து இருப்பது. அங்ஙனன்றிக்கே, 11. "वैकुण्ठे तु परे लोके श्रिया सार्धं जगत्पतिः। आस्ते विष्णुरचिन्त्यात्मा भक्तैर्भागवतैस्सह॥" (வைகுண்டே₂ து பரே லோகே ஶ்ரியா ஸார்த்த₄ம் ஜக₃த்பதி:। ஆஸ்தே விஷ்ணுரசிந்த்யாத்மா

* பரிப்₃ருட₄ன்—தலைவன்.

ப₄க்தைர் ப₄ாக₃வதைஸ் ஸஹ ॥) என்கிறபடியே இவள் அநுகூலரூபையாயிருக்கையாலே இவனுக்கான ஆஸநமும், வாஹனமும் இவளுக்கும் ப்ராப்தம் என்று அருளிச் செய்கிறார்.

ஆக, இப்படி கீழ்ச்சொன்ன யுக்திகளாலே பிராட்டிக்கு நித்ய விபூ₄திஸம்ப₃ந்த₄ம் சொல்லப்பட்டது. இனி மேல் ஶ்லோகஶேஷத்தாலே லீலாவிபூ₄தியோக₃மென்ன, தத₃ந்தர்வர்த்திகளாயிருந்துள்ள ப்₃ரஹ்மருத்₃ராதி₃ தே₃வ க₃ணங்களுடைய ஶேஷத்வமென்ன இவை சொல்லப்படுகிறது. அதெங்ஙனேயென்றால்; **(யவநிகா மாயா ஜக₃ந் மோஹிநீ)** **12. "मायान्तु प्रकृतिं विद्यान्मायिनन्तु महेश्वरम्"** (மாயாம் து ப்ரக்ருதிம் வித்₃யாந் மாயிநம் து மஹேஶ்வரம்) என்றும், **13. "इन्द्रो मायाभिः पुरुरूप ईयते"** (இந்த்₃ரோ மாயாபி₄: புருரூப ஈயதே) என்றும், **14. "दैवी ह्येषा गुणमयी मम माया दुरत्यया। मामेव ये प्रपद्यन्ते मायामेतां तरन्ति ते॥"** (தை₃வீ ஹ்யேஷா கு₃ணமயீ மம மாயா து₃ரத்யயா। மாமேவ யே ப்ரபத்₃யந்தே மாயாமேதாம் தரந்தி தே ॥) என்றும் இத்யாதி₃களாலே ப்ரதிபாதி₃க்கப்பட்டிருக்கிற ப₄க₃வந்மாயையன்றோ உனக்கு யவநிகை. ஒரு திரையின் உள்ளிருக்கும் பேரைப் புறம்பிலவர் காணாதபடியாய், புறப்பட்டிருக்கும் பேரை உள்ளிருக்குமவர்கள் காணாதபடியாயிற்று இருப்பது. அங்ஙனிருக்கையன்றிக்கே **(ஜக₃ந் மோஹிநீ)** என்று எம்பெருமானுக்குத் திரோதா₄யிகையாயிருக்கையன்றிக்கே ஜக₃த்துக்குத் திரோதா₄யிகையாயிருக்குமென்கிறார்.

(ப்₃ரஹ்மேஶாதி₃ஸுரவ்ரஜஸ் ஸத₃யிதஸ் த்வத்₃தா₃ஸதா₃ஸீக₃ண:) பூ₄லோகம் தொடங்கி ஸத்யலோகபர்யந்தமாக மேலுள்ள லோகங்களென்ன, அதல விதல ஸுதல பாதாளோத்தால ரஸாதல போ₄க₃வதீ பர்யந்தமான கீழேழு லோகங்களென்ன, இவற்றில் காணப்பட்டுடையராயிருந்துள்ள தே₃வக₃ணங்களென்ன, இவர்களுக்குக் கொத்து

முதலிகளாயிருந்துள்ள ப்₃ரஹ்மருத்₃ராதி₃களென்ன, ஸரஸ்வதீருத்₃ராணீபுலோமஜாப்ரப்₄ருதிகளாயிருந்துள்ள தே₃வஸ்த்ரீகளென்ன, அப்ஸரோக₃ணங்களென்ன, இவர்களெல்லாரும் ஆணடிமையும், பெண்ணடிமையுமாயிருக்கும் என்கிறார்.

'இவையெல்லாம் யதா₂ர்த்த₂ம் என்றோ? ஸ்தோத்ரம் என்றோ? இது எங்ஙனே கூடும்படி?' என்றால்: (ஶ்ரீரித்யேவ ச நாம தே) 'ஶ்ரீ:' என்றன்றோ உனக்குத் திருநாமம் என்கிறார். "இத்தாலே இவளுக்கு ஸர்வஶேஷிணீத்வமும் தெரிவிக்கப்பட்டதோ?" என்றால்: "ஶ்ரீங்-ஸேவாயாம்" என்கிற தா₄துவாலே, தன்னையொழிந்த சேதநாசேதநங்களாலே ஸ்வரூபஸ்தி₂திப்ரவ்ருத்திகளுக்காக ஆஶ்ரயிக்கப்படுகிறாள் என்றுகொண்டு 'ஶ்ரீ:' என்கிறது. அதுக்கு ப்ரமாணம் 15. "ईश्वरीं सर्वभूतानां" (ஈஶ்வரீம் ஸர்வபூ₄தாநாம்) என்றும், 16. "अस्येशाना जगतः" (அஸ்யேஶாநா ஜக₃த:) என்றும் உண்டாகையாலே. (ப₄க₃வதி) 17. "तुल्यशीलवयोवृत्तां तुल्याभिजनलक्षणां" (துல்யஶீலவயோவ்ருத்தாம் துல்யாபி₄ஜநலக்ஷணாம்) என்கிறபடியே எம்பெருமானோடொக்க ஹேயப்ரதிப₄டமாயிருந்துள்ள கல்யாணகு₃ணகதாநத்வம் சொல்லப்படுகிறது. 18. "मैत्रेय! भगवच्छब्दस्सर्वकारणकारणे। संभर्तेति तथा भर्ता भकारोऽर्थद्वयान्वितः॥ नेता गमयिता स्रष्टा गकारार्थस्तथा मुने॥ ऐश्वर्यस्य समग्रस्य वीर्यस्य यशसः श्रियः। ज्ञानवैराग्ययोश्चैव षण्णां भग इतीरणा॥ वसन्ति तत्र भूतानि भूतात्मन्यखिलात्मनि। स च भूतेष्वशेषेषु वकारार्थस्ततोऽव्ययः॥ ज्ञानशक्तिबलैश्वर्यवीर्यतेजांस्यशेषतः। भगवच्छब्दवाच्यानि विना हेयैर्गुणादिभिः॥ एवमेष महाशब्दो मैत्रेय भगवानिति। परमब्रह्मभूतस्य वासुदेवस्य नान्यगः॥ तत्र पूज्यपदार्थोक्तिपरिभाषासमन्वितः। शब्दोऽयं नोपचारेण त्वन्यत्र ह्युपचारतः॥" (மைத்ரேய! ப₄க₃வச்ச₂ப்₃த₃ஸ்ஸர்வகாரணகாரணே। ஸம்ப₄ர்த்தேதி தத₂ா ப₄ர்த்தா ப₄காரோऽர்த்த₂த்₃வயாந்வித:॥ நேதா க₃மயிதா ஸ்ரஷ்டா க₃காரார்த்த₂ஸ் தத₂ா முநே॥ ஐஶ்வர்யஸ்ய ஸமக்₃ரஸ்ய

வீர்யஸ்ய யஶஸஶ்ஶ்ரிய:। ஜ்ஞாநவைராக்₃யயோஶ்சைவ ஷண்ணும் ப₄க₃ இதீரணா॥ வஸந்தி தத்ர பூ₄தாநி பூ₄தாத்மந்யகிலாத்மநி। ஸ ச பூ₄தேஷ்வஶேஷேஷு வகாரார்த்த₂ஸ் ததோऽவ்யய:॥ ஜ்ஞாநஶக்தி ப₃லைஶ்வர்யவீர்யதேஜாம்ஸ்யஶேஷத:। ப₄க₃வச்ச₂ப்₃த₃வாச்யாநி விநா ஹேயைர் கு₃ணாதி₃பி₄:॥ ஏவமேஷ மஹாஶப்₃தோ₃ மைத்ரேய! ப₄க₃வாநிதி। பரமப்₃ரஹ்மபூ₄தஸ்ய வாஸுதே₃வஸ்ய நாந்யக₃:॥ தத்ர பூஜ்யபதா₃ர்த்தோ₂க்திபரிபா₄ஷாஸமந்வித:। ஶப்₃தோ₃ऽயம் நோபசாரேண த்வந்யத்ர ஹ்யுபசாரத:॥) என்றுகொண்டு ப்ரமாணமுண்டாகையாலே. ஶ்ரிய:பதியை நிர்தே₃ஶிக்கும்போது 19. "प्रदिशतु भगवानशेषपुंसां" (ப்ரதி₂ஶது ப₄க₃வாநஶேஷபும்ஸாம்) என்றும், 20. "सतैव्यो भगवान् हरि:" (ஸ்மர்த்தவ்யோ ப₄க₃வாந் ஹரி:) என்றும், 21- "भगवान् भूतैर्बालः क्रीडनकैरिव" (ப₄க₃வாந் பூ₄தைர் பா₃ல: க்ரீட₂நகைரிவ) என்றும், 4. "भगवन्नारायण" (ப₄க₃வந் நாராயண) என்றும் இப்படி வ்யவஹரிக்கவடுப்பதாயிறே இருப்பது. அவளை நிர்தே₃ஶிக்கும்போது 4. "भगवतीं श्रियं देवीं" (ப₄க₃வதீம் ஶ்ரியம் தே₃வீம்), "ஶ்ரீரித்யேவ ச நாம தே ப₄க₃வதி" என்னும்படியாயிருக்கும்.

(ப்₃ரூம: கத₂ம் த்வாம் வயம்) ஈஶ்வரகு₃ணஸ்தவம் பண்ணும்போது 22. "अनन्ता वै वेदाः" (அநந்தா வை வேதா₃:) என்கிற வேத₃ங்களுமகப்பட, 23. "यतो वाचो निवर्तन्ते अप्राप्य मनसा सह" (யதோ வாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மநஸா ஸஹ) என்றுகொண்டு அளவுகோல் முறிந்து மடங்கும்படியாயிறே இருப்பது. அவன் தன்னையுமகப்பட • சுலகித ப₄க₃வத்₃வைஶ்வரூப்யையாயிருந்துள்ள உன்னை மந்த₃மதிகளுக்கு அக்₃ரேஸரராயிருந்துள்ள நாங்கள் என் சொல்லி வ்யவஹரிப்பது? என்றுகொண்டு பிராட்டியினுடைய பரத்வத்தை ப்ரதிபாதி₃க்கிறார் ஆளவந்தார். 1.

• ஶ்ரீ கு₃ண-4. (ப்ரமாண எண் 6)

यस्यास्ते महिमानमात्मन इव त्वद्वल्लभोऽपि प्रभुः
नालं मातुमियत्तया निरवधिं नित्यानुकूलं स्वतः।
तां त्वां दास इति प्रपन्न इति च स्तोष्याम्यहं निर्भयो
लोकैकेश्वरि! लोकनाथदयिते! दान्ते! दयान्ते विदन्॥२॥

2. யஸ்யாஸ்தே மஹிமாநமாத்மந
இவ த்வத்₃வல்லபே₄ாऽபி ப்ரபு₄:
நாலம் மாதுமியத்தயா
நிரவதி₄ம் நித்யாநுகூலம் ஸ்வத:।
தாம் த்வாம் தா₃ஸ இதி ப்ரபந்ந
இதி ச ஸ்தோஷ்யாம்யஹம் நிர்ப்ப₄யோ
லோகைகேஶ்வரி! லோகநாத₂த₃யிதே!
தா₃ந்தே! த₃யாந்தே வித₃ந்॥

---

2. பதவுரை:— லோகைகேஶ்வரி—லோகத்திற்கு ஒரே ஈஶ்வரியாயிருப்பவளே!, லோகநாத₂த₃யிதே—லோகங்களுக்கெல்லாம் ஸ்வாமியான எம்பெருமானுக்கு ப்ரியமஹிஷியாயிருப்பவளே! தா₃ந்தே—கருணைகல்பவல்லியே! யஸ்யா தே—எந்த உன்னுடைய, நிரவதி₄ம்—அளவற்றதும், ஸ்வத நித்யாநுகூலம்—இயற்கையாக்வே (ப₄க₃வானுக்கு) எப்போதும் அனுகூலமாயிருப்பதுமான, மஹிமாநம்—பெருமையை ப்ரபு₄: த்வத்₃வல்லப₄: அபி—ஈச்வரனுன உன்னுடைய வல்லப₄னும், ஆத்மந: இவ—தன்னுடைய பெருமையைப்போல் இயத்தயா—இவ்வளவென்று, மாதும் ந அலம்—அளவிட்டறிய மாட்டானோ, தாம் த்வாம்—அப்படிப்பட்ட உன்னை. தா₃ஸ: இதி—'தா₃ஸன்' என்றும், ப்ரபந்ந: இதி ச—'ஶரணமடைந்தவன்' என்றும், தே த₃யாம் வித₃ந் அஹம்—உன்னுடைய கருணையை அறியும் நான், நிர்ப்ப₄ய:—ப₄யமற்றவனுய், ஸ்தோஷ்யாமி—துதிக்கிறேன்.

வ்யா:— (யஸ்யாஸ்தே மஹிமாநமாத்மந இவ த்வத்₃வல்லபே₄ாऽபி ப்ரபு₄ர் நாலம் மாதுமியத்தயா நிரவதி₄ம் நித்யாநு

கூலம் ஸ்வத:) 24. "यस्यायुतायुतांशांशे विश्वशक्तिरियं स्थिता" (யஸ்யாயுதாயுதாம்ஶாம்ஶே விஶ்வஶக்திரியம் ஸ்தி₂தா) என்றும், 25. "स्वशक्तिलेशोद्धृतभूतसर्गः" (ஸ்வஶக்திலேஶோத்₃த்₄ருதபூ₄தஸர்க்க₃:) என்றும், 26. "मनसैव जगत्सृष्टिं संहारञ्च करोति यः" (மநஸைவ ஜக₃த்ஸ்ருஷ்டிம் ஸம்ஹாரஞ்ச கரோதி ய:) என்றும், 27. "परास्य शक्तिर्विविधैव श्रूयते स्वाभाविकी ज्ञानबलक्रिया च" (பராஸ்ய ஶக்திர் விவிதை₄வ ஶ்ரூயதே ஸ்வாபா₄விகீ ஜ்ஞாநப₃லக்ரியா ச) என்றும், 28. "एको ह वै नारायण आसीत्" (ஏகோ ஹை நாராயண ஆஸீத்) என்றும், 29. "दिव्यो देव एको नारायणः" (தி₃வ்யோ தே₃வ ஏகோ நாராயண:) என்றும், இப்படி ப்ரமாணங்களாலே ப்ரதிபாதி₃க்கப்பட்ட பரத்வத்தை உடையவனாய், உனக்கு வல்லப₄னான ஸர்வேஶ்வரனுமகப்பட, யச்சு₂ப்₃த₃த்தாலே அவாங்மநஸகோ₃சரமாயிருக்கிற உன்னுடைய அளவிறந்திருக்கிற பெருமையை இவ்வளவென்று நிரூபிக்குமளவில், a "தனக்கும் தன் தன்மையறிவரியான்" என்கிறபடியே தன் வைப₄வநிரூபணம் பண்ணத் தான் மாட்டாதாப்போலே உன்னுடைய வைப₄வநிரூபணம் பண்ணும்போது அஸமர்த்த₂னாயிருக்கும். 'ஆனால் ஜக₃த்துக்கு ஶேஷித்₃வித்வம் உண்டோ?' என்றால்: (நித்யாநுகூலம் ஸ்வத:) 16. "अस्येशाना जगतो विष्णुपत्नी" (அஸ்யேஶாநா ஜக₃தோ விஷ்ணுபத்நீ) என்கையாலே ஜக₃த்தைப் பற்ற இவளுக்கு ஶேஷிணீத்வமும், அவனைப்பற்ற ஶேஷத்வமும் ப்ரதிபாதி₃க்கப்படுகையாலே ஶேஷித்₃வித்வமில்லை. 'ஆனால் இவனைப்பற்ற இவள் ஶேஷபூ₄தையாகில், இவளுடைய வைப₄வநிரூபணம பண்ணவொண்ணாதே' என்னவொண்ணாது. அதெங்ஙனேயென்றால்: 30. "अपूर्वनानारसभावनिर्भरप्रबद्धया मुग्धविदग्धलीलया" (அபூர்வநாநாரஸபா₄வநிர்ப₄ரப்ரப₃த்₃த₄யா முக்₃த₄வித₃க்₃த₄லீலயா) என்று அதிவித₃க்₃த₄மாயிருந்துள்ள க்ரீடா₃வைப₄வத்தாலே b "பித்தர் பனிமலர்

---

a திருவாய் 8-4-6. b திருநெடுந்தாண்டகம் 18.

மேல் பாவைக்கு" என்கிறபடியே ப்ரேமபரவஶனுயிருக்கை யாலே ஸர்வஜ்ஞனுயிருந்தானேயாகிலும் நிரூபிக்கமாட் டாதேயாய்த்து இருப்பது.

(தாம் த்வாம்) கீழ் ப்ரதிபாதி₃க்கப்பட்ட பரத்வத்தை நிரூபகத₄ர்மமாக உடையையாயிருக்கிற உன்னை என்றபடி. **(தா₃ஸ இதி)** 'அடியேன்' என்றுகொண்டு ஆஶ்ரயிக்கிறேன் என்கிருர். **15. "ईश्वरीं सर्वभूतानां"** (ஈஶ்வரீம் ஸர்வபூ₄தாநாம்) என்றும், **16. "अस्येशाना जगतः"** (அஸ்யேஶாநா ஜக₃த:) என்றும் சொல்லுகையாலே, நமக்கு ஜக₃த்தைப் பற்ற ஶேஷிணீத்வம் ஸாத₄ாரணமன்ருே? உமக்கு அவர்களிற் காட்டில் விஶேஷமென்? என்று பிராட்டி அருளிச்செய் தார். 'அவர்களிற்காட்டில் நெடுவாசியுண்டே; ஸ்வரூபாநு ரூபமான ஶேஷத்வபூர்வகமாக ப்ரபந்நனுனேன்' என் கிருர், — **(ப்ரபந்ந இதி ச)** என்றுகொண்டு. **(ஸ்தோஷ்யாம் யஹம் நிர்ப்ப₄ய:)** அதினுலே நிர்ப்ப₄யனுய்க்கொண்டு ஸ்தோத்ரம் பண்ணுகிறேன் என்கிருர். ஸ்தோத்ரமாகிறது இல்லாததொன்றைச் சொல்லுகையாயிருக்கும். இங்குத் தைக்கு அங்ஙனல்ல; **31. "भूतार्थव्याहृतिस्सा हि न स्तुतिः परमेष्ठिनः"** (பூ₄தார்த்த₂வ்யாஹ்ருதிஸ் ஸா ஹி ந ஸ்துதி: பரமேஷ்டி₂ந:) என்கிறபடியே உள்ள கு₃ணங்களைத்தான் யதா₂வத் ப்ரதிபாதி₃க்கப் போகாதேயாய்த்து இருப்பது. இவையும் எத்தாலேயென்ருல்: **(லோகைகேஶ்வரி)** ஜக₃த் தைப்பற்ற இவள் ஶேஷிணியாகையாலே. இவளுக்கு ஜக₃த்தைப்பற்ற ஸ்வாமிநீத்வம் எத்தாலே வந்ததென்ருல்: **(லோகநாத₂த₃யிதே)** லோகநாத₂னுயிருக்கிற நாராயணனுக்கு தி₃வ்யமஹிஷியாகையாலே.

"இங்ஙனெத்த மேன்மையை உடையோமான நம்மை உம்மால் பரிச்சே₂தி₃க்கப்போமோ?" எனப் பிராட்டி திருவுள்ளமாக, "அது ஒக்கும்; உம்முடைய மேன்மையை நிரூபித்தோமாகிலன்ருே நாங்கள் ப₄ங்கு₃ரதீ₄

(भक्तरथी)களாவது. உம்முடைய நீர்மையை நிரூபிக்கும் போது மந்த₃மதிகளாயிருந்துள்ள அஸ்மதா₃தி₃களுக்கும் ஸ்தோத்ரம் பண்ணுகையிலே யோக்₃யதையுண்டாம்" என்கிறார். (த₃ாந்தே) * கருணோஜ்ஜ்வலஸம்வர்த்தி₄தையாயிருக்கிற கற்பகக் கொடியே! (த₃யாம் தே விதா₃ந்) த₃யையாவது,- "ஸ்வார்த்த₂நிரபேக்ஷா பரது₃:க்க₂ாஸஹிஷ்ணுதா" என்றிறே த₃யாலக்ஷணமிருக்கும்படி. அங்ஙனேத்திருந்துள்ள உன்னுடைய த₃யையை அறியாநின்றுகொண்டேன் என்றபடி. "அங்ஙனேத்த க்ருபை நம் பக்கலுண்டோ?" என்று திருவுள்ளமாக, 32. "**पापानां वा...... नापराध्यति** ||" (பாபாநாம் வா ...... நாபராத்₄யதி ||) என்றுகொண்டு, எம்பெருமான் தே₃வகார்யார்த்த₂மாக யாதொரு தி₃வ்யமங்க₃ளவிக்₃ரஹத்தைக் கொண்டான் தத₃னுகூலமாக தேவரீரும் வடிவைக்கொள்ளக் கடவதாயிருக்கையாலே, அவன் ராக₄வனாய்க்கொண்டு அவதரித்தபோது, தேவரீரும் ஸ்ரீ ஜநகராஜன் திருமகளான ஸீதையாய்க்கொண்டு அவதரித்து, ராவணனைப் புத்ரமித்ரகளத்ராதி₃களோடு தரைப்படுத்துகைக்காகவும், ஸ்ரீ விபீ₄ஷணாழ்வானை ஸ்தா₂பிக்கைக்காகவும் அஸோகவனிகையிலே இருந்து, காட்டை வெட்டி நாடாக்கினாப்போலேயும், களைபறித்துப் பயிராக்குமாபோலேயும், அஸங்கிராஸபூர்வகமாக ஸத்பாலனம் பண்ணுகைக்காக ராவணனைக் கொன்றருளினவனந்தரமாக, தர்ஜநபு₄ர்த்ஸநாதி₃களைப் பண்ணின ராக்ஷஸிகளைக் கொல்லுகையிலே உத்₃யுக்தனாயிருந்துள்ள திருவடியைக் குறித்து உன் பரமக்ருபையை ப்ரகடீகரித்தபடியை பு₃த்₃தி₄ பண்ணிக்கொண்டு நிர்ப்ப₄யனாய் ஸ்தோத்ரம் பண்ணினேனென்கிறார் ஆளவந்தார். 2.

---

* "கருணாம்ருதஸம்வர்த்தி₄தையான கற்பகக்கொடியே" என்று இவருடைய குமாரரான நாயனாராச்சான் பிள்ளையின் வ்யாக்₂யான பாட₂ம்.

ईषत्त्वत्करुणानिरीक्षणसुधासन्धुक्षणाद्रक्ष्यते
नष्टं प्राक्तदलाभतस्त्रिभुवनं संप्रत्यनन्तोदयम् ।
श्रेयो नह्यरविन्दलोचनमनःकान्ताप्रसादादृते
संसृत्यक्षरवैष्णवाध्वसु नृणां संभाव्यते कर्हिचित् ॥ ३ ॥

3. ஈஷத் த்வத்கருணாநிரீக்ஷண
ஸுதா₄ஸந்து₄க்ஷணாத் ரக்ஷ்யதே
நஷ்டம் ப்ராக் தத₃லாப₄தஸ்
த்ரிபு₄வநம் ஸம்ப்ரத்யநந்தோத₃யம் ।
ஶ்ரேயோ ந ஹ்யரவிந்த₃லோசநமந:-
காந்தாப்ரஸாத₃ாத்₃ருதே
ஸம்ஸ்ருத்யக்ஷரவைஷ்ணவாத்₄வஸு
ந்ருணாம் ஸம்பா₄வ்யதே கர்ஹிசித் ॥

---

3. பதவுரை:— தத் அலாப₄த: — அந்தக் கடாக்ஷம் இல்லாமையாலே, ப்ராக் நஷ்டம்—முன் நசித்துக் கிடந்ததான, த்ரிபு₄வநம் — மூவுலகமும், ஸம்ப்ரதி — இப்போது, ஈஷத்—சிறிதுபோது, த்வத் கருணா நிரீக்ஷண ஸுதா₄ ஸந்து₄க்ஷணாத் — உன்னுடைய கருணைகடாக்ஷமாகிற அம்ருத வர்ஷத்தினால், அநந்தோத₃யம் — அளவற்ற பெருமையை உடைத்தாகும்படி, ரக்ஷ்யதே — காப்பாற்றப்படுகிறது; ந்ருணாம் — மனிதர்களுக்கு, ஸம்ஸ்ருதி அக்ஷர வைஷ்ணவாத்₄வஸு—ஐஶ்வர்யம், கைவல்யம், பரமபத₃ம் இவைகளில், ஶ்ரேய:—மேன்மையானது, அரவிந்த₃ லோசந மந: காந்தா ப்ரஸாத₃ாத் ருதே—தாமரைக்கண்ணனின் மனத்துக்கினியவளான ஸ்ரீதே₃வியின் அருளில்லாமல், ந ஹி ஸம்பா₄வ்யதே—ஏற்படாதன்றோ.

வ்யா:— (ஈஷத் த்வத்கருணாநிரீக்ஷணஸுதா₄ ஸந்து₄க்ஷணாத் ரக்ஷ்யதே நஷ்டம் ப்ராக் தத₃லாப₄தஸ் த்ரிபு₄வநம்) "पृथिव्यप्सु प्रलीयते। आपस्तेजसि लीयन्ते। तेजो वायौ लीयते। वायुराकाशे लीयते। आकाशमव्यक्ते लीयते। अव्यक्तमक्षरे लीयते। अक्षरं

तमसि लीयते। तमः परे देव एकीभवति॥" (ப்ருதி₂வ்யப்ஸு ப்ரலீயதே। ஆபஸ்தேஜஸி லீயந்தே। தேஜோ வாயௌ லீயதே। வாயுராகாஶே லீயதே। ஆகாஶமவ்யக்தே லீயதே। அவ்யக்தமக்ஷரே லீயதே। அக்ஷரம் தமஸி லீயதே। தம: பரே தே₃வ ஏகீப₄வதி॥) என்றும், 28. "न ब्रह्मा नेशानः। नेमे द्यावापृथिवी" (ந ப்₃ரஹ்மா நேஶாந:। நேமே த்₃யாவா ப்ருதி₂வீ) என்றும், 34. "आनीदवातं स्वधया तदेकं। तस्माद्धान्यं न परः किञ्चनास।" (ஆநீத₃வாதம் ஸ்வத₄யா ததே₃கம்। தஸ்மாத்₃த₄ாந்யம் ந பர: கிஞ்சநாஸ।) என்றும், 35. "तद्धेदं तर्ह्यव्याकृतमासीत्" (தத்₃தே₄த₃ம் தர்ஹ்யவ்யாக்ருத மாஸீத்) என்றும், 36. "आसीदिदं तमोभूतमप्रज्ञातमलक्षणम्। अप्रतर्क्यमविज्ञेयं प्रसुप्तमिव सर्वतः॥" (ஆஸீதி₃த₃ம் தமோபூ₄தம் அப்ரஜ்ஞாதமலக்ஷணம்। அப்ரதர்க்யமவிஜ்ஞேயம ப்ரஸுப்த மிவ ஸர்வத:॥) என்றும் a "ஒன்றும் தேவுமுலகுமுயிரும் மற்றும் யாதுமில்லாவன்று" என்றும் ஶ்ருதியோடு ஸ்ம்ருதியோடு ஆழ்வார் பாசுரத்தோடு வாசியற ப்ரதி பாதி₃க்கிற ப்ரளயத்திலே, 37. "नारायणाद्ब्रह्मा जायते। नारायणाद्रुद्रो जायते।" (நாராயணாத் ப்₃ரஹ்மா ஜாயதே। நாரா யணாத் ருத்₃ரோ ஜாயதே।) என்றும், 28. "स एकाकी न रमेत" (ஸ ஏகாகீ ந ரமேத) என்றும், 38. "बहुस्यां प्रजायेयेति" (ப₃ஹு ஸ்யாம் ப்ரஜாயேயேதி) என்றும், 39. "तत्सृष्ट्वा तदेवानुप्राविशत्" (தத் ஸ்ருஷ்ட்வா ததே₃வாநுப்ராவிஶத்) என்றும், 35. "तन्नामरूपाभ्यां व्याक्रियत" (தந்நாமரூபாப்₄யாம் வ்யாக்ரியத) என்றும், 40. "सर्वाणि रूपाणि विचित्य धीरः नामानि कृत्वाऽभिवदन् यदास्ते" (ஸர்வாணி ரூபாணி விசித்ய தீ₄ர: நாமாநி க்ருத்வாऽபி₄வத₃ந் யதா₃ஸ்தே) என்றும், 41. "सर्वे निमेषा जज्ञिरे विद्युतः पुरुषादधि" (ஸர்வே நிமேஷா ஜஜ்ஞிரே வித்₃யுத: புருஷாத₃தி₄) என்றும், 42. "अप एव ससर्जादौ तासु वीर्यमवासृजत्। तदण्डमभवद्धैमं सहस्रांशुसमप्रभम्॥ तस्मिन् जज्ञे स्वयं ब्रह्मा सर्वलोकपितामहः॥ ततः स्वयंभूर्भगवानव्यक्ते

a திருவாய்-4-10-1.

व्यञ्जयन्निदम्। महाभूतादि वृत्तौजाः प्रादुरासीत्तमोनुदः॥" (அப ஏவ ஸஸர்ஜாதௌ₃ தாஸு வீர்யமவாஸ்ருஜத்। தத₃ண்ட₃மப₄வத்₃தை₄மம் ஸஹஸ்ராம்ஶுஸமப்ரப₄ம்॥ தஸ்மிந் ஜஜ்ஞே ஸ்வயம் ப்₃ரஹ்மா ஸர்வலோகபிதாமஹ:॥ ததஸ் ஸ்வயம் பூ₄ர் ப₄க₃வாநவ்யக்தே வ்யஞ்ஜயந்நித₃ம்। மஹாபூ₄தாதி₃ வ்ருத்தௌஜா: ப்ராது₃ராஸீத் தமோநுத₃:॥) என்றும், a "நான்முகன் தன்னொடு தேவருலகோடுயிர் படைத்தான்" b "நான்முகனை நாராயணன் படைத்தான் நான்முகனும், தான்முகமாய்ச் சங்கரனைத்தான் படைத்தான்" என்றும் இப்படி ப்ரதிபாதி₃க்கப்பட்ட ப்₃ரஹ்மா முதலான ஸ்ருஷ்டியை ஈஶ்வரன் உகக்கும்போது 6. **"यद्भ्रूभङ्गाः प्रमाणं स्थिरचररचनातारतम्ये मुरारेः, वेदान्तास्तत्त्वचिन्तां मुरभिदुरसि यत्पादचिह्नैस्तरन्ति।"** (யத்₃ப்₄ரூப₄ங்கா₃: ப்ரமாணம் ஸ்தி₂ரசரரசநா தாரதம்யே முராரேர் வேதா₃ந்தாஸ் தத்த்வசிந்தாம் முரபி₄து₃ரஸி யத்பாத₃சிஹ்நைஸ் தரந்தி।) என்றும், 43. **"उल्लासपल्लवितपालितसप्तलोकीनिर्वाहकोरकितनेमकटाक्षलीलां"** (உல்லாஸபல்லவிதபாலிதஸப்தலோகீநிர்வாஹகோரகிதநேமகடாக்ஷ-லீலாம்) என்றும் இவள் கடாக்ஷமடியாகவாய்த்து உண்டாவது.

§ இன்னமும், "பிராட்டிக்கு ஜக₃த்காரணத்வத்திலே அந்வயமுண்டோ?" என்று நடாதூரம்மாள் பிள்ளானை ப்ரஶ்நம் பண்ண, "ஆவதென்? இவ்வர்த்த₂த்தில் ஸந்தே₃ஹமுண்டோ? 44. **'आवाभ्यां कर्माणि कर्तव्यानि। प्रजाश्च उत्पादयितव्याः॥'** (ஆவாப்₄யாம் கர்மாணி கர்த்தவ்யாநி। ப்ரஜாஶ்சோத்பாத₃யிதவ்யா:॥) என்றன்றோ இருப்பது. இவள் ஸஹத₄ர்ம சாரிணியன்றோ" என்று அருளிச் செய்தார் பிள்ளான்.

---

a திருவாய் 4-10-1. b நான்முகன்திருவந்தாதி-1.

§ இந்த ஐதிஹ்யம் நாயனாராச்சான்பிள்ளையின் வ்யாக்₂யானத்திலும் காணப்படுகிறது.

ஆக, இப்படி ஶ்ருதிஸ்ம்ருதிகளென்ன, ஆழ்வார் பாசுரமென்ன, இவற்றை அடியொற்றினவர் பாசுரமென்ன இவற்றாலே ஈஶ்வரன் 38. **"तदैक्षत बहु स्यां प्रजायेयेति"** (ததை₃க்ஷத ப₃ஹு ஸ்யாம் ப்ரஜாயேயேதி) என்று ஸ்ருஷ்டிக்கக்கடவதாகப் பார்த்தருளினபோது, **(ஈஷத் த்வத்கருணாநிரீக்ஷணஸுதா₄ஸந்து₄க்ஷணாத் ரக்ஷ்யதே)** அவன் பார்வைக்கு அனுகூலமாய், கருணாஜலபரிபூர்ணமாயிருந்துள்ள உன்னுடைய கடாக்ஷவிக்ஷேபங்களாலேயன்றே ஜக₃த்து ரக்ஷிக்கப்படுகிறது. **(நஷ்டம் ப்ராக் தத₃லாப₄த:)** அம்ருதஜலவர்ஷங்களாயிருக்கிற அந்தக் கடாக்ஷமின்றியே இருக்கையாலேயன்றே 45. **"असन्नेव स भवति"** (அஸந்நேவ ஸ ப₄வதி) என்கிறபடியே நாமரூபவிப₄ாக₃ாநர்ஹமாய்க் கொண்டு இருந்தது. **(ஸம்ப்ரத்யநந்தோத₃யம்)** கடுங்கோடையிலே நொந்த பயிர் மேக₄மேறி வர்ஷித்தால் தேறுமாபோலே, நீர் பார்த்தருளுகையாலே இப்போது அநந்தோத₃யமாய்த்து. **'ஆவதென்?'** என்றால்: மஹீமஹீத₄ரஜலநிதி₄ரூபமான ஜக₃த்தென்ன, தத₃ந்தர்வர்த்திகளான தே₃வதிர்யங்மநுஷ்யஸ்த₂ாவரரூபமான சதுர்வித₄தே₃ஹ ப்ரவேஶம் பண்ணியிருக்கிற ஆத்மகோடிகளென்ன, இவற்றை உடைத்தாயிற்று.

(ஶ்ரேயோ ந ஹ்யரவிந்த₃லோசநமந:காந்தாப்ரஸாத₃ாத் ருதே) 46. **"तस्य यथा कप्यासं पुण्डरीकमेवमक्षिणी"** (தஸ்ய யத₂ா கப்யாஸம் புண்ட₃ரீகமேவமக்ஷிணீ) என்றுகொண்டு ஈஶ்வரனுடைய உத்பு₂ல்லமான தாமரைப்பூப்போலே இருந்துள்ள திருக்கண்மலரில் அழகு. 47. **"मत्स्यः कमल-लोचनः"** (மத்ஸ்ய: கமலலோசந:) என்றும் 48. **"महावराहः स्फुटपद्मलोचनः"** (மஹாவராஹ: ஸ்பு₂டபத்₃மலோசந:) என்றும், 49. **"रामो राजीवलोचनः"** (ராமோ ராஜீவலோசந:) என்றும், 50. **"कृष्णः कमललोचनः"** (க்ருஷ்ண: கமலலோசந:) என்றும் இப்படி மத்ஸ்யமநுஷ்யாதி₃விக்₃ரஹபரிக்₃ரஹம்

பண்ணினலும் கண்ணை மறைக்கப்போகாதேயிறேயிருப்பது. ஸர்வாங்க₃ங்களும் மறையும்படியாகக் கவசமிட்டாலும் கண்ணைக் கவசமிடுவானிலனிறே. ஆக, தாமரைக் கண்ணன் என்கையாலே இவனுக்கு அவாப்தஸமஸ்த காமத்வம் சொல்லப்பட்டது.

(அரவிந்த₃லோசநமந:காந்தா) இங்ஙனொத்த வைப₄வத்தை உடையனுயிருந்துள்ள ஈஶ்வரனுடைய திருவுள்ளத்திற்கு உகப்பைப் பண்ணுமவளாயிருக்கும். "ப₄ார்யை" என்னுதே "காந்தை" என்பானென்? என்ருல்: a"உனக் கேற்கும் கோலமலர்ப்பாவைக்கன்பாகிய என் அன்பேயோ!" என்றும், b"பித்தர் பனிமலர்மேல் பாவைக்கு" என்றும், 51. "अस्या देव्या मनस्तस्मिंस्तस्य चास्यां प्रतिष्ठितम्" (அஸ்யா தே₃வ்யா மநஸ்தஸ்மிம்ஸ்தஸ்ய சாஸ்யாம் ப்ரதிஷ்டி₂தம்) என்றும் ப்ரமாணமுண்டாகையாலே காந்தாஶப்₃த₃ப்ரயோக₃ம் பண்ணுகிருர். (ப்ரஸாத₃ாத்₃ருதே) இங்ஙனொத்திருந்துள்ள இவளுடைய ப்ரஸாத₃த்தையொழிய.

(ஸம்ஸ்ருத்யக்ஷரவைஷ்ணவாத்₄வஸ₂ நருணும் ஸம்ப₄ாவ்யதே கர்ஹிசித்) ஸம்ஸ்ருதியாவது ஐஶ்வர்யம்; அக்ஷரமாவது கைவல்யமோக்ஷம்; வைஷ்ணவாத்₄வா வாகிறது,— 52. "न च [illegible]वर्तते। न च पुनरावर्तते" (ந ச புநராவர்த்ததே। ந ச புந₂ரா[illegible]த்ததே॥) என்றும், 53. "तद्विष्णोः परमं पदं" (தத்₃ விஷ்ணோ: பரமம் பத₃ம்) என்றும். c"பிணைகொடுக்கிலும் போகவொட்டார்" என்றும், இப்படி ஶ்ருதியோடு, ஆழ்வார் பாசுரத்தோடு வாசியற ப்ரதிபாதி₃க்கிற பரமபத₃ம் ஆக, இவ்வழிகளில் அரவிந்த₃லோசநமந:காந்தையுடைய ப்ரஸாத₃த்தையொழிய மநுஷ்யரில் வைத்துக் கொண்டு ஒருவருக்கும் ஶ்ரேயஸ் வாராது என்கிருர் ஆளவந்தார். 3.

---

a திருவாய் 10-10-6. b திருநெடு-18. c பெரியாழ்·திரு 4-5-2.

शान्तानन्दमहाविभूति परमं यद्ब्रह्म रूपं हरेः
मूर्तं ब्रह्म ततोऽपि तत्प्रियतरं रूपं यदत्यद्भुतम् ।
यान्यन्यानि यथासुखं विहरतो रूपाणि सर्वाणि ता-
न्याहुः स्वैरनुरूपरूपविभवैर्गाढोपगूढानि ते ॥ ४ ॥

4. ஶாந்தாநந்த₃மஹாவிபூ₄தி
பரமம் யத் ப்₃ரஹ்ம ரூபம் ஹரே:
மூர்த்தம் ப்₃ரஹ்ம ததோऽபி
தத்ப்ரியதரம் ரூபம் யத₃த்யத்₃பு₄தம் ।
யாந்யந்யாநி யதா₂ஸுக₂ம்
விஹரதோ ரூபாணி ஸர்வாணி தாந்-
யாஹு: ஸ்வைரநுரூபரூபவிப₄வைர்
கா₃டோ₄பகூ₃டா₄நி தே ॥

---

4. பதவுரை:—ஶாந்த—ஷடூ₃ர்மிகளற்றதாய், ஆநந்த₃—ஆநந்த₃மயமாய், மஹாவிபூ₄தி—பெரிய விபூ₄திகளை உடையதாய், பரமம்—தனக்கு மேலானதற்றதாய், ப்₃ரஹ்ம—பெரிதாயிருப்பதாலும், (பிறரைப்) பெரிதாகச் செய்வதாலும் ப்₃ரஹ்மஶப்₃த₃த்தாலே சொல்லப்படுவதாயிருக்கும், ஹரே: யத் ரூபம்—ஹரியினுடைய யாதொரு ஸ்வரூபமுண்டோ, தத: அபி—அதைக்காட்டிலும், தத்ப்ரியதரம்—அந்த ப₄க₃வானுக்கு மிகவும் பிரியமாயிருப்பதும், மூர்த்தம்—கண்ணால் காணக்கூடியதும், ப்₃ரஹ்ம—ப்₃ரஹ்மஶப்₃த₃த்தால் சொல்லப்படுவதும், அத்யத்₃பு₄தம்—மிகவும் அத்₃பு₄தமானதுமான, ரூபம் யத்—யாதொரு ரூபம் உண்டோ, யதா₂ஸுக₂ம் விஹரத:—இஷ்டப்படி விளையாடும் எம்பெருமானுக்கு, அந்யாநி ரூபாணி யாநி—மற்றும் யாவை சில ரூபங்களுண்டோ, தாநி ஸர்வாணி—அந்த ரூபங்களெல்லாம், தே—உனக்கு, ஸ்வை: அநுரூபரூபவிப₄வை:—அஸாதா₄ரணங்களாய் தகுந்தவையாயிருக்கும் தி₃வ்ய ரூபங்களால், கா₃டோ₄பகூ₃டா₄நி ஆஹு:—நன்ருக ஆலிங்கனம் செய்யப்பட்டவையென்று (ப்ரமாணங்கள்) சொல்லுகின்றன.

வ்யா:— (ஶாந்தாநந்த₃மஹாவிபூ₄தி பரமம் யத் ப்₃ரஹ்ம ரூபம் ஹரே:) ஶாந்தியாவதென்னென்றால், — 54. **"अशनायाऽपिपासे च शोकमोहौ जरामृती। षडूर्मिभिर्विशुद्धा"** (அஶநாயாऽபி பாஸே ச ஶோகமோஹௌ ஜராம்ருதீ। ஷடூ₃ர்மிபி₄ர் விஶுத்₃த₄ா) என்றுகொண்டு ஶ்ருதியில் சொல்லப்பட்டபடி ஷடூ₃ர்மிரஹிதமாயிருக்குமென்றபடி. இன்னமும், 55. **"अपक्षय विनाशाभ्यां परिणामर्धिजन्मभिः। वर्जितः शक्यते वक्तुं यस्सदाऽस्तीति केवलम्॥"** (அபக்ஷயவிநாஶாப்₄யாம் பரிணாமர்த்தி₄ஜந்மபி₄:। வர்ஜித: ஶக்யதே வக்தும் யஸ்ஸதா₃ऽஸ்தீதி கேவலம்॥) என்றுகொண்டு பராஶர ப்₃ரஹ்மர்ஷியாலே ப்ரதிபாதி₃க்கப்பட்டபடி ஷட்₃பா₄வவிகாரரஹிதம் என்கிறதாகவுமாம். (ஆநந்த₃) 56. **"ज्ञानानन्दमयं यस्य स्वरूपं परमात्मनः"** (ஜ்ஞாநாநந்த₃மயம் யஸ்ய ஸ்வரூபம் பரமாத்மந:) என்கிறபடியே ஆநந்த₃ரூபமாயிருக்கும். 'ஆநந்த₃ரூபமாயிருக்கையாவதென்?' என்றால்: தன்னைத் தான் அநுப₄விக்கும்போது ஸுக₂ாவஹமாயிருக்கை. (மஹாவிபூ₄தி) 57. **"अङ्गुलस्याष्टभागोऽपि न सोऽस्ति मुनिसत्तम। न सन्ति प्राणिनो यत्र कर्मबन्धनिबन्धनाः॥"** (அங்கு₃லஸ்யாஷ்டபா₄கோ₃ऽபி ந ஸோऽஸ்தி முநிஸத்தம। ந ஸந்தி ப்ராணிநோ யத்ர கர்மப₃ந்த₄ நிப₃ந்த₄நா:॥) என்றுகொண்டு மஹர்ஷியாலே ப்ரதிபாதி₃க்கப்படுகையாலே, யாதோரிடத்தில் ஜீவஸமூஹமுண்டு, அங்கே பரமாத்மஸந்நிதி₄ உண்டாயிருக்கும். அதெங்ஙனேயென்னில்: 58. **"यस्यात्मा शरीरं। यस्य पृथिवी शरीरं।"** (யஸ்யாத்மா ஶரீரம்। யஸ்ய ப்ருதி₂வீ ஶரீரம்।) என்றுகொண்டு ப்ரமாணமுண்டாகையாலே. ஶரீரத்தையொழிந்தன்றிறே ஶரீரியிருப்பது. ஆக, "மஹாவிபூ₄தி" என்று தி₃வ்யாத்மஸ்வரூபத்தினுடைய விபு₄த்வம் ப்ரதிபாதி₃க்கப்பட்டது.

(பரமம்) "பரோ மாऽஸ்யேதி பரம:" என்கிறபடியே இதுதன்னுடைய நிருபமத்வம் ப்ரதிபாதி₃க்கப்படுகிறது. 'இதுக்கு ப்ரமாணமென்?' என்றால்: 59. **"न तत्समश्चाभ्यधिकश्च दृश्यते"** (ந தத்ஸமஶ்சாப்₄யதி₄கஶ்ச த்₃ருஶ்யதே,) 60.

"**न सन्दृशे तिष्ठति रूपमस्य न चक्षुषा पश्यति कश्चनैनम्**" (ந ஸந்த்₃ருஶே திஷ்ட₂தி ரூபமஸ்ய ந சக்ஷுஷா பஶ்யதி கஶ்சநைநம்) a "ஒத்தார் மிக்காரையிலையாய மாமாயா!" என்றுமுண்டாகையாலே. யச்ச₂ப்₃த₃த்தாலே 61. "**वचसा-मात्मसंवेद्यं**" (வசஸாமாத்மஸம்வேத்₃யம்) என்கிறபடியே இதுதன்னுடைய அவாங்மநஸகோ₃சரத்வம் ப்ரதிபாதி₃க்கப்படுகிறது. (ப்₃ரஹ்ம) 62. "**बृहत्त्वाद्बृंहणत्वाच्च ब्रह्म इत्यभिधीयते**" (ப்₃ருஹத்த்வாத் ப்₃ரும்ஹணத்வாச்ச ப்₃ரஹ்ம இத்யபி₄தீ₄யதே) என்று சொல்லுகிறபடியே, கீழ்ச்சொன்ன மஹாவிபூ₄திஶப்₃த₃த்தாலே ஆர்த்த₂மாக ப்ரதிபாதி₃க்கப்பட்ட தி₃வ்யாத்ம ஸ்வரூபவிபு₄த்வம் ப்₃ரஹ்மஶப்₃த₃த்தாலே ஶாப்₃த₃மாக ப்ரதிபாதி₃க்கப்படுகிறது. ஆக, இப்படிப் பூர்வபாத₃த்தாலே ஷடூ₃ர்மிரஹிதமாய், தனக்கு ஸுக₂ாவஹமாய், நிருபமமாய், அவாங்மநஸ கோ₃சரமாய், ப்₃ருஹத்த்வப்₃ரும்ஹணத்வகு₃ணயோகி₃யாயிருக்கிற தி₃வ்யாத்மஸ்வரூபம் ப்ரதிபாதி₃க்கப்பட்டது.

இனி, உத்தரவாக்யத்தாலே தி₃வ்யமங்க₃ளவிக்₃ரஹம் ப்ரதிபாதி₃க்கப்படுகிறது. (**மூர்த்தம் ப்₃ரஹ்ம ததோऽபி தத்ப்ரியதரம் ரூபம் யத₃த்₃யத்₃பு₄தம்**)கீழ் ப்ரதிபாதி₃க்கப்பட்ட அமூர்த்தமான ப்₃ரஹ்மத்திற்காட்டில் ப₄க₃வானுக்கு அத்யந்தம் ப்ரீதிப்ரகர்ஷஜநகமாய், மூர்த்தமாய், ப்₃ரஹ்ம ஶப்₃த₃வாச்யமாய், அத்யாஶ்சர்யமாயிருக்கிறது யாதொரு தி₃வ்யமங்க₃ள விக்₃ரஹம் அது ப்ரதிபாதி₃க்கப்படுகிறது. "விக்₃ரஹோ...*" என்றும், 63. "**अरूपी हि जनार्दनः**" (அரூபீ ஹி ஜநார்த்த₃ந:) என்றும், 64. "**न ते रूपं न चाकारः**" (ந தே ரூபம் ந சாகார:) என்றும் இப்படி ஈஶ்வரனுக்கு விக்₃ரஹமில்லையென்று கொண்டு ப்ரமாணங்கள் உண்டாயிருக்க, தி₃வ்யம் ஸ்வரூபம் என்றும், தி₃வ்யமங்க₃ளவிக்₃ரஹமென்றும் எங்ஙனே? என்று இப்படிச்சொல்லுவார் வேதா₃ந்தநிஷ்ட₂ருடைய கோ₃ஷ்டி₂யில் ப₃ஹிஷ்க்ருதரான பேரிறே. "ஆவதென்?

a திருவாய் 2-3-2. * இந்த ப்ரமாணம் தெளிவாக விளங்கவில்லை.

சோத்₃யம் பண்ணினல் பரிஹரிக்குமித்தனையொழியப் பரிவாதி₃யாகின்றீர். இப்படி ப்ரமாணமுண்டோ?" என்றால்,— உண்டு. அதெங்ஙனேயென்றால் : 46. **"य एषोऽन्तरादित्ये हिरण्मयः पुरुषो दृश्यते"** (ய ஏஷோऽந்தராதி₃த்யே ஹிரண்மய: புருஷோ த்₃ருஶ்யதே) 41. **"सर्वे निमेषा जज्ञिरे विद्युतः पुरुषादधि"** (ஸர்வே நிமேஷா ஜஜ்ஞிரே வித்₃யுத: புருஷாத₃தி₄) 65. **"आदित्यवर्णं तमसः परस्तात्"** (ஆதி₃த்யவர்ணம் தமஸ: பரஸ்தாத்) 66. **"ध्येयस्सदा सवितृमण्डलमध्यवर्ती नारायणस्सरसिजासनसन्निविष्टः। केयूरवान् मकरकुण्डलवान् किरीटी हारी हिरण्मयवपुर्धृतशङ्खचक्रः॥"** (த்₄யேயஸ்ஸதா₃ ஸவித்ருமண்ட₃லமத்₄யவர்த்தீ நாராயணஸ் ஸரஸிஜாஸநஸந்நிவிஷ்ட:। கேயூரவாந் மகரகுண்ட₃லவாந் கிரீடீ ஹாரீ ஹிரண்மய வபுர் த்₄ருதஶங்க₂ சக்ர:॥), 67. **"किरीटकौस्तुभधरं मित्राणामभयप्रदम्"** (கிரீடகௌஸ்துப₄த₄ரம் மித்ராணாமப₄யப்ரத₃ம்), a "நீண்டபொன் மேனியொடும் நிறைந்தென்னுள்ளே நின்றொழிந்தான்" என்றுகொண்டு இப்படி ப்ரமாண முண்டாகையாலே உன்னுடைய அபி₄மதம் ஸித்₃தி₄யாது.

(யாந்யந்யாநி யத₂ாஸுக₂ம் விஹரதோ ரூபாணி ஸர்வாணி) 68. **"अजायमानो बहुधा विजायते"** (அஜாயமாநோ ப₃ஹுதா₄ விஜாயதே) என்றும், b "பிறப்பில் பல் பிறவிப் பெருமான்" என்றும் இப்படி ப்ரமாணமுண்டாகையாலே ஜநிஜராதி₃ து₃ரிததூ₃ரனாயிருந்துள்ள ஸர்வேஶ்வரன் தன்னுடைய ஸௌலப்₄யம் என்கிற கு₃ணத்தை ஒப்பமிடுகைக்காக, 38. **"बहु स्यां प्रजायेय"** (ப₃ஹு ஸ்யாம் ப்ரஜாயேய) என்றும் 69. **"एष नारायणः श्रीमान् क्षीरार्णवनिकेतनः। नागपर्यङ्कमुत्सृज्य ह्यागतो मथुरां पुरीम्॥"** (ஏஷ நாராயண: ஶ்ரீமாந் க்ஷீரார்ணவ நிகேதந:। நாக₃பர்யங்க முத்ஸ்ருஜ்ய ஹ்யாக₃தோ மது₄ராம் புரீம்॥) என்றும், 70. **"स हि देवैरुदीर्णस्य रावणस्य वधार्थिभिः। अर्थितो मानुषे लोके जज्ञे विष्णुस्सनातनः॥"** (ஸ ஹி தே₃வை ருதீ₃ர்ணஸ்ய ராவணஸ்ய வத₄ார்த்தி₂பி₄:। அர்த்தி₂தோ

a திருவாய் 5-5-7. b திருவாய் 2-9-5.

மாநுஷே லோகே ஜஜ்ஞே விஷ்ணுஸ் ஸநாதந:||) 71. "**संभवामि युगे युगे**" (ஸம்ப₄வாமி யுகே₃ யுகே₃) என்றும், 25. "**इच्छागृहीताभिमतोरुदेहः संसाधिताशेषजगद्धितोऽसौ**" (இச்சா₂க்₃ருஹீதாऽபி₄மதோருதே₃ஹஸ் ஸம்ஸாதி₄தாऽஶேஷ ஜக₃த்₃தி₄தோऽஸௌ) என்றும், 72. "**विष्णुत्वमुपजग्मिवान्**" (விஷ்ணுத்வமுபஜக்₃மிவாந்) என்றும் இப்படி ப்ரமாண முண்டாகையாலே, அதி₃திக்கு த்₃வாத₃ஶபுத்ரனுய்க் கொண்டு அவதரித்த அவதாரத்தோடும், a "தயரதன் பெற்ற மரதக மணித்தடம்" என்கிற ராமாவதாரத் தோடும், b "மண்ணின் பாரம் நீக்குதற்கே வடமதுரைப் பிறந்தான்" என்கிறபடியே தே₃வகார்யார்த்த₂மாக அவ தரித்தருளின ராமக்ருஷ்ணுத்₃யவதாரங்களோடும் வாசியற.

(தாந்யாஹுः ஸ்வைரநுரூபரூபவிப₄வைர் கா₃டோ₄பகூ₃டா₄நி தே) 73. "**राघवत्वेऽभवत्सीता रुक्मिणी कृष्णजन्मनि। अन्येषु चावतारेषु विष्णोरेषाऽनपायिनी ॥**" (ராக₄வத்வேऽப₄வத் ஸீதா ருக்மிணீ க்ருஷ்ணஜந்மநி। அந்யேஷு சாऽவதாரேஷு விஷ்ணோரேஷாऽநபாயிநீ||) என்கிறபடியே அவ்வோ அவ தாரவிக்₃ரஹங்களுக்கு அநுரூபமான உன்னுடைய அவ்வோ அவதாரங்களிலுண்டான தி₃வ்யமங்க₃ளவிக்₃ரஹத்தாலே, 74. "**उपेतं सीतया भूयश्चित्रया शशिनं यथा**" (உபேதம் ஸீதயா பூ₄யஶ் சித்ரயா ஶஶிநம் யதா₂) என்றும், 75. "**भर्तारं परिषस्वजे**" (ப₄ர்த்தாரம் பரிஷஸ்வஜே) என்றும் இப்படி ப்ரமாணமுண்டாகையாலே கா₃ட₄மாக ஆலிங்க₃நம் பண் ணும்படியிறே இருப்பது. ஆக, இந்நாலு ஶ்லோகத்தால் லக்ஷ்மீவிஶிஷ்டமான வஸ்துவே உபேயமாகக்கடவது என்றத்தை அருளிச்செய்கிருர் ஆளவந்தார்.

ஆளவந்தார் திருவடிகளே ஶரணம்.
பெரியவாச்சான் பிள்ளை திருவடிகளே ஶரணம்.
பரமகாருணிகரான பெரியவாச்சான் பிள்ளை அருளிச்செய்த சதுஶ்ஶ்லோகி வ்யாக்₂யாநம் முற்றிற்று.

---

a திருவாய் 10-1-8. b திருவாய் 9-1-10.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:



சதுச்ச்லோகீ வ்யாக்யான ப்ரமாணத்திரட்டு

1. ஸ்தோத்ரரத்நம்-12.
2. ,, -45.
3. ஶ்தோ. ப்ர. (268).
4. ப$_4$க$_3$வந்நாராயணாபி$_4$மதாநுரூப ஸ்வரூபரூப கு$_3$ணவிப$_4$வை ஶ்வர்ய ஶீலாத்$_3$யநவதி$_4$காதிஶயாऽஸங்க்$_2$யேய கல்யாண கு$_3$ணக$_3$ணாம் பத்$_2$மவநாலயாம் ப$_4$க$_3$வதீம் ஸ்ரியம் தே$_3$வீம் நித்யாநபாயிநீம் நிரவத்$_3$யாம் தே$_3$வதே$_3$வதி$_3$வ்யமஹிஷீம் அகி$_2$லஜக$_3$ந்மாதரம் அஸ்மந்மாதரம் அஶரண்யஶரண் யாம் அநந்யஶரண: ஶரணமஹம் ப்ரபத்$_3$யே ||

[ப$_4$க$_3$வானான நாராயணனுக்கு இஷ்டமாகவும், தகுந்த தாகவுமுள்ள ஸ்வரூபம், ரூபம், (ரூப) குணம், விபூதி, ஐஶ்வர்யம், ஶீலம் முதலான எல்லையற்றமேன்மையை யுடையவையும், கணக்கற்றவையுமான கல்யாணகுண கணங்கள், இவற்றை உடையவளும், பத்மவனத்தை இருப்பிடமாக உடையவளும், பூஜிக்கத்தக்கவளும், எப் போதும் (எம்பெருமானை விட்டு) அகலகில்லாதவளும், தோ$_3$ஷமற்றவளும், தேவதேவனான எம்பெருமானுடைய திவ்யமஹிஷியும், எல்லாவுலகிற்கும் தாயாயிருப்பவளும், (விசேஷமாக) எனக்குத் தாயாயிருப்பவளும், கதியற்றவர் களுக்கு கதியாயிருப்பவளுமான ஸ்ரீதேவியை, (வேறொரு) கதியற்ற அடியேன் ஶரணமடைகிறேன்.]

5. ஸ்ரீவல்லப$_4$

[பெரியபிராட்டியாருக்கு வல்லப$_4$னாயிருப்பவனே!]

---

4. ஶரணாக$_3$தி க$_3$த்$_3$யம்-1. 5. ஶரணாக$_3$தி க$_3$த்$_3$யம்-6.

6. யத்₃ப்₄ரூப₄ங்க₃ா: ப்ரமாணம்
ஸ்தி₂ரசரரசநாதாரததம்யே முராரே:
வேத₃ாந்தாஸ் தத்வசிந்தாம்
முரபி₄து₃ரஸி யத்பாத₃சிஹ்நைஸ் தரந்தி।
பே₄ாகே₃ாபோத்₃க₄ாதகேளீசுளகித
ப₄க₃வத்₃வைஶ்வரூப்யாநுப₄ாவா
ஸா ந: ஸ்ரீராஸ்தருணீதாமம்ருத
லஹரிதீ₄லங்க₄நீயைர பாங்கை₃: ॥

[முராரியின் ஸ்தாவர்ஜங்கமாத்மகமான ஜகத்ஸ்ருஷ்டியில் உயர்வுதாழ்வுகளுக்கு எவளுடைய புருவநெரிப்பு காரணமாயிருக்கிறதோ. முராரியின் திருமார்பில் எவளுடைய திருவடியடையாளங்களைக் கண்டு வேதாந்தங்கள் பரதத்வவிசாரணையை முடிக்கின்றனவோ, பகவானுடைய விஶ்வரூபாநுபவத்தையும், தன்னுடைய போகாரம்பமாகிற விளையாட்டாலே கையளவாக ஆக்குபவளான அந்த ஸ்ரீதேவி, அம்ருதக்கடலலைகளை வென்ற கடாக்ஷங்களாலே என்னைக் குளிப்பாட்டுவாளாக.]

7. த்₃வாவிமௌ புருஷௌ லோகே க்ஷரஶ்சாக்ஷர ஏவ ச।
க்ஷரஸ் ஸர்வாணி பூ₄தாநி கூடஸ்தோ₂ऽக்ஷர உச்யதே ॥
உத்தம: புருஷஸ் த்வந்ய: பரமாத்மேத்யுதா₃ஹ்ருத:।
யோ லோகத்ரயமாவிஶ்ய பி₃ப₄ர்த்யவ்யய ஈஶ்வர: ॥
யஸ்மாத் க்ஷரமதீதோऽஹமக்ஷராத₃பி சோத்தம:।
அதோऽஸ்மி லோகே வேதே₃ ச ப்ரதி₂த: புருஷோத்தம: ॥

[க்ஷரன் என்றும், அக்ஷரன் என்றும் லோகத்தில் புருஷர்கள் இருவிதமானவர்கள், எல்லாபூதங்களும் க்ஷரனாகும். கூடஸ்தனான முக்தாத்மா அக்ஷரனெனப்படுகிறான். எவனொருவன் மூவுலகங்களிலும் நுழைந்து (அவற்றை) த₄ரிப்பவனாகவும், குறைவற்றவனாகவும், நியமிப்பவனாகவும் பரமாத்மா என்று சொல்லப்படுபவனாகவும் விளங்குகிறானோ, அந்தப் புருஷோத்தமன் (முன்

6. ஸ்ரீகுணரத்நகோசம்-4. 7. கீதை 15-16, 17, 18.

சொல்லப்பட்ட புருஷர்களைக்காட்டிலும்) வேறுபட்டவன். நான் ஞானத்தில் ஏற்றக்குறைவுகளுள்ள க்ஷரபுருஷனை அதிக்ரமித்திருப்பதாலும், ஞானத்தில் ஏற்றக்குறைவு களற்ற முக்தபுருஷனைக்காட்டிலும் மேலானவனுயிருப்ப தாலும், ஶ்ருதியிலும், ஸ்ம்ருதியிலும் புருஷோத்தமனென்று பிரஸித்தி பெற்றிருக்கிறேன்.]

8. **அகாரேணோச்யதே விஷ்ணுஸ் ஸர்வலோகேஶ்வரோ ஹரி:। உத்₃த்₄ருதா விஷ்ணுநா லக்ஷ்மீருகாரேணோச்யதே ஸதா₃॥ மகாரஸ்து தயோர் தா₃ஸ இதி ப்ரணவலக்ஷணம்॥**

[ஸர்வலோகங்களுக்கும் ஈச்வரனும் ஹரியென்றும், விஷ்ணு என்றும் சொல்லப்படுபவனுமான எம்பெருமான் அகாரத்தி னுல் சொல்லப்படுகிறுன். விஷ்ணுவினுல் (மார்பில்) எப்போ தும் த₄ரிக்கப்பட்டிருப்பவளான லக்ஷ்மி உகாரத்தினுல் சொல்லப்படுகிறுள். அவர்களுக்கு தா₃ஸனுன ஜீவன் மகார வாச்யன் என்பதே ப்ரணவத்தின் லக்ஷணம்.]

9. **ஸ்தோ. ப்ர. (28).**

10. **த்ரிவ்ருத் தே ஶிரோ கா₃யத்ரம் சக்ஷு: ஸ்தோம ஆத்மா ஸாம தே தநூர் வாமதே₃வ்யம் ப்₃ருஹத் ரத₂ந்தரே பக்ஷௌ யஜ்ஞா யஜ்ஞியம் புச்ச₂ம் ச₂ந்தா₃ம்ஸ்யங்கா₃நி தி₄ஷ்ணியா: ஶபா₂ யஜூம்ஷி நாம।**

[வேதத்தின் பல பாகங்களை கருடனுடைய பல அவயவங்க ளாகக் கூறுவது இந்த மந்த்ரம்.]

11. **ஸ்தோ. ப்ர. (249).**

12. **மாயாந்து ப்ரக்ருதிம் வித்₃யாந் மாயிநந்து மஹேஶ்வரம்**

[ப்ரக்ருதியை, ஆச்சரியமான ஸ்ருஷ்டிக்கு ஹேதுவா யிருப்பதால் மாயை என்றும், அந்த மாயையைத் தூண்டு பவனை மஹேச்வரனென்றும் அறியக்கடவன்.]

---

8. ஶ்ருதி. 10. தைத்-யஜு:ஸ்ஸம்ஹிதை 4-1-42.
12. ஶ்வேதாஶ்வதரம் 4-10.

13. இந்த்$_3$ரோ மாயாபி$_4$: பு[illegible] யதே

[பரமைச்வர்யத்தை உடைத்தாயிருப்பதால் இந்த்$_3$ரன் எனப்ப[illegible] ரத்மா ப்ரக்ருதியாகிற மாயையினுல் பல உருவங்களுடன் ஸஞ்சரிக்கிருன்.]

14. தை$_3$வீ ஹ்யேஷா கு$_3$ணமயீ மம மாயா து$_3$ரத்யயா |
மாமேவ யே ப்ரபத்$_3$யந்தே மாயாமேதாம் தரந்தி தே ||

[தேவனுகிற என்னுல் நிர்மிக்கப்பட்டதும், முக்குணங்களை உடையதுமான இந்த என்னுடைய மாயை தாண்ட அரிதானது. என்னையே எவர்கள் ஶரணமடைகிருர்களோ அவர்கள் இந்த மாயையைத் தாண்டுகிருர்கள்.]

15. ஸ்தோ. ப்ர. (131).

16. „ (132).

17. „ (268).

18. ப்ரமாணத்திற்கு மூலத்தைப் பார்க்கவும்.

[மைத்ரேயரே! 'ப$_4$க$_3$வான்' என்னும் ஶப்$_3$த$_3$ம், ஸர்வகாரணங்களுக்கும் காரணபூ$_4$தனுன ஸர்வேச்வரன் விஷயத்தில் சொல்லப்படுகிறது. '(ப்ரக்ருதியை)கார்யத$_3$ஶையை அடையச் செய்பவன்', 'ஸ்வாமி' என்னும் இரண்டு அர்த்த$_2$ங்களுடன் கூடியது ப$_4$காரம்; முனிவரே! அப்படியே 'ரக்ஷிப்பவன், ஸம்ஹரிப்பவன், ஸ்ருஷ்டிப்பவன்' என்பது க$_3$காரத்தின் அர்த்த$_2$ம். ஸம்பூர்ணமான ஐஶ்வர்யம், வீர்யம், யஶஸ், செல்வம், ஜ்ஞானம், வைராக்$_3$யம் என்னும் இந்த ஆறு குணங்களுக்கும் 'ப$_4$க$_3$' என்னும் பத$_3$ம் வாசகமாயிருக்கிறது. பூ$_4$தங்களை ஶரீரமாகக்கொண்டவனும், எல்லாவற்றுக்கும் ஆத்மாவாயிருப்பவனுமான அவனிடத்தில் பூ$_4$தங்கள் வஸிக்கின்றன. அவனும் எல்லா பூ$_4$தங்களிலும் வஸிக்கிருன். ஆகையால் அழிவற்றவனுன ப$_4$க$_3$வான் வகாரத்துக்கு

---

13. ப்$_3$ருஹ 4.5.19. 14. கீதை 7-14. 18. வி-பு. 6-5-72...78.

அர்த்த₂மாகிறான். கீழானவையான முக்குணங்கள் முதலிய வற்றுடன் சேராத 'ஜ்ஞானம்' ஶக்தி, ப₃லம், ஐச்வர்யம், வீர்யம், தேஜஸ்' என்னும் எல்லா குணங்களும், 'ப₄க₃வாந்' என்னும் ஶப்₃த₃த்தினால் சொல்லப்படுகின்றன. மைத்ரேயரே; இம்மாதிரியாக ப₄க₃வான் என்னும் இந்த மஹா ஶப்₃த₃ம் பரப்₃ரஹ்மமான வாஸுதேவனுக்கே உரித்தானது. வேறொருவரையும் குறிக்காது. 'பூஜிக்கத்தக்க பொருளைக் குறிப்பது' என்னும் பரிபா₄ஷையுடன் கூடிய இந்த ஶப்₃த₃ம் அவன் விஷயத்தில் ஔபசாரிகமாகச் சொல்லப்படுவ தில்லை. மற்ற விஷயங்களில் ஔபசாரிகமாக (அமுக்₂ய மாக) சொல்லப்படுகிறது.

19. இதி விவித₄மஜஸ்ய யஸ்ய ரூபம்
ப்ரக்ருதிபராத்மமயம் ஸநாதநஸ்ய।
ப்ரதி₃ஶது ப₄க₃வாநஶேஷபும்ஸாம்
ஹரிரபஜந்மஜராதி₃காம் ஸ ஸித்₃தி₄ம்॥

[பிறப்பற்றவனும், பழைமையானவனுமான எந்த விஷ்ணு வுக்குப் பலவிதமான ப்ரக்ருதியென்ன, (அதைக்காட்டிலும் மேலான) திவ்யமங்களவிக்ரஹமென்ன, ஆத்மஸ்வரூப மென்ன, இவை இம்மாதிரியாக ஶரீரங்களாயிருக் கின்றனவோ, அந்த ப₄க₃வான் ஹரி எல்லா மனிதர் களுக்கும், பிறப்பு, மூப்பு முதலியவைகளைப் போக்கடிக்கும் மோக்ஷஸித்₃தி₄யை, அருளுவானாக.]

20. மஹத்யாபதி₃ ஸம்ப்ராப்தே ஸ்மர்த்தவ்யோ ப₄க₃வாந் ஹரி:

[பேராபத்து வந்த காலத்தில் **ப₄க₃வானை** ஹரி நினைக்கத் தகுந்தவன்.]

21. அநியோஜ்யோऽப்ரமேயஶ்ச யஸ்து காமஶரீரத்₄ருத்।
மோத₃தே ப₄க₃வாந் பூ₄தைர் பா₃ல: க்ரீட₃நகைரிவ॥

---

19. வி-பு. 6-8-64. 21. பாரதம், ஸபாபர்வம் 40-78.

[ஏவப்படாதவனும், அறியமுடியாதவனும், இஷ்டப்பட்ட உருவங்களை த₄ரிப்பவனுமான ப₄க₃வான், சிறுவன் விளையாட்டுக்கருவிகளுடன் விளையாடுவதுபோல் பூ₄தங்களுடன் விளையாடி ஸந்தோஷிக்கிறன்.]

22. அநந்தா வை வேத₃ா:

[வேதங்கள் அளவற்றவை.]

23. ஸ்தோ. ப்ர. (5).

24. ,, (139).

25. ஸமஸ்தகல்யாணகு₃ணாத்மகோऽஸௌ
ஸ்வஶக்திலேஶோத்₃த்₄ருதபூ₄தஸர்க்க₃: ।
இச்ச₂ாக்₃ருஹீதாபி₄மதோருதே₃ஹஸ்
ஸம்ஸாதி₄தாऽஶேஷஜக₃த்₃தி₄தோऽஸௌ ॥

[இந்த ப₄க₃வான் ஸகலகல்யாணகுணங்களையும் இயற்கையாகவே உடையவன்; தன்னுடைய ஶக்தியில் ஒரு சிறிய பகுதியினலேயே த₄ரிக்கப்பட்ட பூ₄தங்களை உடையவன்; இச்சை₂யினலேயே எடுக்கப்பட்டவையும், இஷ்டமானவையுமான பல தே₃ஹங்களை உடையவன்; இவன் எல்லா ஜகத்துக்கும் நன்மையைச் செய்பவன்.]

26. மநஸைவ ஜக₃த்ஸ்ருஷ்டிம் ஸம்ஹாரஞ்ச கரோதி ய: ।
தஸ்யாரிபக்ஷக்ஷபணே கியாநுத்₃யமவிஸ்தர: ॥

[எவனொருவன் மனத்தினலேயே உலகத்தின் ஸ்ருஷ்டியையும், ஸம்ஹாரத்தையும் செய்கிறனே; அவனுக்கு எதிரிகளை நிரஸிப்பதில் என்ன பெருமுயற்சி வேண்டும்?]

27. ஜி. ப்ர. (67).

28. ஏகோ ஹ வை நாராயண ஆஸீத் । ந ப்₃ரஹ்மா நேஶாந: ।
நேமே த்₃யாவா ப்ருதி₂வீ । ... ஸ ஏகாகீ ந ரமேத ॥

---

22. தைத். ப்ராஹ். காட. 1-16. 25. வி-பு 6-5-84.
26. வி-பு 5-22-15. 28. மஹோபனிஷத்.

[நாராயணன் ஒருவனே இருந்தான்; பிரமனுமில்லை சிவனுமில்லை; இந்த ஆகாஶமும், பூ₄மியுமில்லை...அவன் ஒருவனுயிருந்து ஆநந்த₃த்தை அடையவில்லை.]

29. ஏஷ ஸர்வபூ₄தாந்தராத்மாऽபஹதபாப்மா தி₃வ்யோ தே₃வ ஏகோ நாராயண:

[இவன் ஸர்வபூதங்களுக்கும் அந்தர்யாமியாயிருப்பவனும், தோஷமற்றவனும், ஸ்ரீவைகுண்டத்தில் வஸிப்பவனும், தேவனுமான நாராயணன் ஒருவனே.]

30. ஸ்தோத்ரரத்நம்-44.

31. இதி ப்ரஸாத₃யாமாஸுஸ் தே ஸுராஸ் தமதே₄ாக்ஷஜம்।
பூ₄தார்த்த₂வ்யாஹ்ருதிஸ் ஸா ஹி ந ஸ்துதி: பரமேஷ்டி₂ந:॥

[அந்த தேவர்கள் இந்திரியங்களால் அறியமுடியாதவனை அந்த எம்பெருமானை இம்மாதிரி உகப்பித்தார்கள். பரமபத₃த்தில் வாழ்பவனை அவன் விஷயத்தில் அது உண்மையான விஷயத்தைச் சொல்லுவதேயன்றோ; (இல்லாத விஷயத்தை ஏறிட்டுச் சொல்லும்) ஸ்தோத்ரமல்லவே.]

32. ஜி. ப்ர. (34).

33. ப்ருதி₂வ்யப்ஸு ப்ரலீயதே। ஆபஸ்தேஜஸி லீயந்தே।
தேஜோ வாயௌ லீயதே। வாயுராகாஶே லீயதே
ஆகாஶமவ்யக்தே லீயதே। அவ்யக்தமக்ஷரே லீயதே।
அக்ஷரம் தமஸி லீயதே। தம: பரே தே₃வ ஏகீ ப₄வதி॥

[பூமி ஜலத்தில் ஒடுங்குகிறது; ஜலம் அக்னியில் லயிக்கிறது; அக்னி வாயுவில் லயிக்கிறது; வாயு ஆகாசத்தில் ஒடுங்குகிறது; ஆகாசம் அவ்யக்தத்தில் ஒடுங்குகிறது; அவ்யக்தம் அக்ஷரத்தில் லயிக்கிறது; அக்ஷரம் தமஸ்ஸில் லயிக்கிறது; தமஸ் பரதெய்வத்திடம் ஒன்றுகிறது.]

---

29. ஸுபாலோபனிஷத்-7. 31. ரகுவம்சம் 10-33.
33. ஸுபாலோபனிஷத்-2.

34. ஆநீத₃வாதம் ஸ்வத₄யா ததே₃கம் ।
தஸ்மாத்₃த₄ாந்யம் ந பர: கிஞ்சநாஸ ।
[பஞ்சபூதங்களற்றதான அந்தப் பரவஸ்து ஒன்றே ஸ்வத₄ாசப்தத்தினால் சொல்லப்படும் பிராட்டியுடன் இருந்தது. அதைக்காட்டிலும் வேறுபட்டது மற்ற எதுவுமில்லை.]

35. தத்₃தே₄த₃ம் தர்ஹ்யவ்யாக்ருதமாஸீத் ।
தந்நாமரூபாப்₄யாம் வ்யாக்ரியத ।
[இவ்வுலகம் ஸ்ருஷ்டிக்குமுன் நாமரூபங்களற்றதான ப்ரக்ருதியை ஶரீரமாக உடைய ப்ரஹ்மமாயிருந்தது. அது நாமரூபங்களை உடையதாயிற்று.]

36. ஆஸீதி₃த₃ம் தமோபூ₄தமப்ரஜ்ஞாதமலக்ஷணம் ।
அப்ரதர்க்யமவிஜ்ஞேயம் ப்ரஸுப்தமிவ ஸர்வத: ॥
[இவ்வுலகம் தமஸ்ஸில் ஒடுங்கினதாகவும், ப்ரத்யக்ஷமல்லாததாகவும், அனுமானத்தாலும் அறியமுடியாததாகவும், ஶப்₃த₃ரூபமான தர்க்கத்தாலும் அறியமுடியாததாகவும், வேறு. எதனாலும் அறியமுடியாதாகவும், எப்புறத்திலும் தூங்குவதைப்போல் சேஷ்டையற்றதாயும் இருந்தது.]

37. நாராயணாத் ப்₃ரஹ்மா ஜாயதே ।
நாராயணாத் ருத்₃ரோ ஜாயதே ।
[நாராயணனிடமிருந்து பிரமன் உண்டாகிறான். நாராயணனிடமிருந்து ருத்₃ரன் உண்டாகிறான்.]

38. ஸ்தோ. ப்ர. (115).

39. ஶ்ரீ. ப்ர. (78).

40. வேத₃ாஹமேதம் புருஷம் மஹாந்தம்
ஆதி₃த்யவர்ணம் தமஸஸ்து பாரே ।
ஸர்வாணி ரூபாணி விசித்ய தீ₄ர:
நாமாநி க்ருத்வாऽபி₄வத₃ந் யத₃ாஸ்தே ॥

---

34. ஶ்ருதி 35. ப்ருஹதாரண்யகம் 3-4-7. 36. மநு 1.5.
37. நாராயணோபநிஷத். 40. புருஷஸூக்தம்-16.

[ஸர்வஜ்ஞரான எந்தப் பரமபுருஷன் எல்லா சரீரங்களையும் உண்டுபண்ணி, பெயர்களைக் கொடுத்து, அவைகளை உச்சரித்துக்கொண்டிருக்கிருரோ, ஸூர்யன் போன்ற வர்ணத்தை உடையவரும், ப்ரக்ருதிமண்டலத்திற்கு அப்பாலிருப்பவரும், (எல்லாவிதத்திலும்) பெரியவருமான இந்தப்புருஷனை, (வேதபுருஷனுகிய) நான் அறிகிறேன்.]

41. ஸர்வே நிமேஷா ஜஜ்ஞிரே வித்₃யுத: புருஷாத₃தி₄ ।

[மின்னலைப்போன்ற உருவையுடைய புருஷனிடமிருந்து எல்லா நிமிஷங்களும் உண்டாயின.]

42. ப்ரமாணத்திற்கு மூலத்தைப் பார்க்கவும்.

[பிறகு, தன்னிச்சையாலே சரீரபரிக்ரஹம் செய்த பகவான், அவ்யக்தமான ப்ரக்ருதியில் (ஸ்தூ₂லரூபமான) மஹாபூ₄தங்கள் முதலியவற்றை வெளிப்படுத்திக்கொண்டு, தடையற்ற ப₃லத்தையுடையவனுவும், ப்ரக்ருதியைத் தூண்டுபவனுகவும் தோன்றினுன். (அந்த பகவான்) ஆதி₃யில் தண்ணீரை ஸ்ருஷ்டித்தான்; அதில் தன் சக்தி ரூபமான வீர்யத்தை விதைத்தான்; அந்த வீர்யத்திலிருந்து ஸ்வர்ணமயமானதும் ஸூர்யனைப்போன்ற ஒளியையுடையதுமான அண்டம் உண்டாயிற்று; ஸர்வலோகத்திற்கும் பிதாமஹனுன பிரமன் அதில் தானுக உண்டானுன்.]

43. உல்லாஸபல்லவிதபாலிதஸப்தலோகீ
நிர்வாஹகோரகிதநேமகடாக்ஷலீலாம் ।
ஸ்ரீரங்க₃ஹர்ம்யதலமங்க₃ளதீ₃பரேக₂ாம்
ஸ்ரீரங்க₃ராஜமஹிஷீம் ஸ்ரீயமாஶ்ரயாம: ॥

[உல்லாஸமாகத் தளிர்விடுவதும், ரக்ஷிக்கப்படும் ஏழுலகங்களுடைய நிர்வாஹத்தினுலே மொட்டுவிடுவதுமான அர்த்த₄கடாக்ஷலீலையை உடையவளும், திருவரங்கம் பெரிய கோயிலுக்கு (ஒரு) மங்களதீபக்கொழுந்துபோல் இருப்

41. தை-நாரா-8. 42. மநுஸ்ம்ருதி 1-6, 8, 9. 43. ஸ்ரீகுண 2.

பவளும், ஸ்ரீரங்கநாதனுடைய திவ்யமஹிஷியானவளுமான ஸ்ரீதேவியை ஆச்ரயிக்கிறோம்.]

44. ஆவாப்₄யாம் கர்மாணி கர்த்தவ்யாநி ।
ப்ரஜாஶ்சோத்பாத₃யிதவ்யா: ।

[நம்மிருவராலும் காரியங்கள் செய்யப்படவேண்டும்; பிரஜைகளும், ஸ்ருஷ்டிக்கப்படவேண்டும்.]

45. ஸ்தோ. ப்ர. (245).

46. „ (135).

47. மத்ஸ்ய: கமலலோசந:

[தாமரைபோன்ற கண்ணையுடைய மத்ஸ்யமூர்த்தி.]

48. ஸ்தோ. ப்ர. (136).

49. ஊநஷோட₃ஶவர்ஷோ மே ராமோ ராஜீவலோசந: ।
ந யுத்₃த₄யோக்₃யதாமஸ்ய பஶ்யாமி ஸஹ ராக்ஷஸை: ॥

[தாமரை போன்ற கண்ணையுடையவனை என்னுடைய ராமன் பதினாறுக்கும் குறைந்த வயதையுடையவன். இவனிடம் ராக்ஷஸர்களுடன் யுத்தம் செய்ய யோக்யதையைக் காணவில்லை.]

50. க்ருஷ்ண: கமலலோசந:

[தாமரைபோன்ற கண்ணையுடைய க்ருஷ்ணன்.]

51. அஸ்யா தே₃வ்யா மநஸ்தஸ்மிந் தஸ்ய சாஸ்யாம் ப்ரதிஷ்டி₂தம் ।
தேநேயம் ஸ ச த₄ர்மாத்மா முஹூர்த்தமபி ஜீவதி ॥

[இந்த ஸீதாதேவியினுடைய மனம் அந்த ராமபிரானிடமும் அவருடைய மனம் இந்த தேவியிடமும் லயித்திருக்கிறது. அதனாலேயே இவளும், தர்மாத்மாவான அவரும் சிறிது காலமாவது ஜீவித்திருக்கிறார்கள்.]

52. ந ச புநராவர்த்ததே। ந ச புநராவர்த்ததே ।

---

49. ரா-பா 20-2. 51. ரா.ஸு 15-52.

[(இந்த முக்தாத்மா) மறுபடியும் திரும்பி வருவதில்லை; மறுபடியும் திரும்பி வருவதில்லை.]

53. ஸ்தோ. ப்ர. (113).

54. அஶநாயாऽபிபாஸே ச ஶோகமோஹௌ ஜராம்ருதீ।
ஷடூ3ர்மிபி4ர் விஶுத்3த4ா

[பசி, தாகம், சோகம், மோஹம், கிழத்தனம், மரணம் என்னும் ஆறு ஊர்மிகளற்றது.]

55. அபக்ஷயவிநாஶாப்4யாம் பரிணாமர்த்3தி4ஜந்மபி4: ।
வர்ஜித: ஶக்யதே வக்தும் யஸ் ஸதா3ாऽஸ்தீதி கேவலம் ॥

[குறைவு படுதல், நாசமடைதல், மாறுபாடடைதல், வளருதல், பிறத்தல், இவைகளற்றவனுகவும், எப்போதும் 'இருக்கிருன்' என்றே சொல்லப்படுபவனுமாயிருப்பவன் பகவான்.]

56. ஜ்ஞாநாநந்த3மயம் யஸ்ய ஸ்வரூபம் பரமாத்மந:

[எந்தப் பரமாத்மாவினுடைய ஸ்வரூபம் ஜ்ஞாநாநந்த3மயமாயிருக்கிறதோ...]

57. அங்கு3லஸ்யாஷ்டபா4கே3ாऽபி ந ஸோऽஸ்தி முநிஸத்தம।
ந ஸந்தி ப்ராணிநோ யத்ர கர்மப3ந்த4நிப3ந்த4நா: ॥

[முனிச்ரேஷ்ட2ரே! கர்மப3ந்த4த்தைக் காரணமாகக்கொண்ட பிராணிகள் இல்லாததான அங்குலத்தில் எட்டில் ஒரு பா4க3மும் கிடையாது.]

58. யஸ்யாத்மா ஶரீரம்। யஸ்ய ப்ருதி2வீ ஶரீரம்

[எவனுக்கு ஆத்மா ஶரீரமோ, எவனுக்கு பூ4மி சரீரமோ...]

59. ந தத்ஸமஶ்சாப்4யதி4கஶ்ச த்3ருஶ்யதே

[அந்தப் புருஷனுக்கு ஸமமாகவும், மேலானவனுகவும் ஒருவரும் காணப்படவில்லை.]

---

52. சாந் 8-15-1. 54. ஶ்ருதி. 55. வி-பு. 1-2-11.
57. வி-பு 3-7-4. 58. ப்ருஹ. 5-7. 59. ஶ்வே 6.

60. ஜி. ப்ர. (69).

61. ப்ரத்யஸ்தமிதபே₄த₃ம் யத் ஸத்தாமாத்ரமகோ₃சரம்।
வசஸாமாத்மஸம்வேத்₃யம் தத் ஜ்ஞாநம்
ப்₃ரஹ்மஸம்ஜ்ஞிதம் ॥

[(ஜாதி முதலிய) பே₄த₃மற்றதும், விகாரமற்றதும், வாக்குகளுக்கு எட்டாததும், ஸ்வயம்ப்ரகாஶமும், ஜ்ஞானஸ்வரூபமான அது ப்₃ரஹ்மமென்று சொல்லப்படுகிறது.]

62. ப்₃ருஹத்வாத் ப்₃ரும்ஹணத்வாச்ச ப்₃ரஹ்ம இத்யபி₄தீ₄யதே

[பெரிதாயிருப்பதாலும், (பிறரைப்) பெரிதாகச்செய்வதாலும் ப்₃ரஹ்மம் என்று சொல்லப்படுகிறது.]

63. அரூபீ ஹி ஜநார்த₃ந:

[ஜநார்த்தனன் ரூபமற்றவனன்றோ.]

64. ஜிதந்தே ஸ்தோத்ரம்-5.

65. ஸ்தோ. ப்ர. (134).

66. த்₄யேயஸ் ஸதா₃ ஸவித்ருமண்ட₃லமத்₄யவர்த்தி
நாராயணஸ் ஸரஸிஜாஸநஸந்நிவிஷ்ட:।
கேயூரவாந் மகரகுண்ட₃லவாந் கிரீடீ
ஹாரீ ஹிரண்மயவபுர்த்₄ருதஶங்க₂சக்ர: ॥

[ஸூர்யமண்ட₃லத்தின் நடுவிலிருப்பவனும், கமலாஸனத்தில் வீற்றிருப்பவனும், தோள்வளை, மகரகுண்ட₃லம், கிரீடம், ஹாரம், இவைகளை உடையவனும், ஸுவர்ணமயமான ஶரீரத்தை உடையவனும், ஶங்க₂சக்ரங்களை த₄ரித்தவனுமான நாராயணன் எப்போதும் தியானிக்கத்தக்கவன்.]

67. கிரீடகௌஸ்துப₄த₄ரம் மித்ராணாமப₄யப்ரத₃ம்।

[கிரீடத்தையும், கௌஸ்துப₄த்தையும் த₄ரிப்பவனும், (தன்னை) அண்டினவர்களுக்கு அப₄யமளிப்பவனுமான (எம்பெருமானை).]

68. ஸ்தோ. ப்ர. (80)

ஸ்தோ—48 61.வி-பு6-7-53. 62.வி-பு3-3-22. 66.நாரஸிம்ஹபுராணம்.

69. ஏஷ நாராயண: ஸ்ரீமாந் க்ஷீரார்ணவநிகேதந: ।
நாகபர்யங்கமுத்ஸ்ருஜ்ய ஹ்யாகதோ மதுராம் புரீம் ॥

[பாற்கடலில் பள்ளிகொண்டவனான இந்த ஸ்ரீமந்நாராயணனே பைந்நாகப்பாயை விட்டு மதுராபுரிக்கு வந்திருக்கிறான்.]

70. ஸ்தோ. ப்ர. (187).

71. ஜி. ப்ர. (21).

72. ரக்ஷார்த்தம் ஸர்வபூதாநாம் விஷ்ணுத்வமுபஜக்மிவாந்

[எல்லா ஜீவராசிகளையும் ரக்ஷிப்பதற்காக, விஷ்ணுவாயிருக்கும் தன்மையை அடைந்தான்.]

73. ராகவத்வேऽபவத் ஸீதா ருக்மிணீ க்ருஷ்ணஜந்மநி ।
அந்யேஷு சாவதாரேஷு விஷ்ணோரேஷாऽநபாயிநீ ॥

[இந்தப் பிராட்டி, (பகவான்) ராமனாய் அவதரித்தபோது ஸீதையானாள்; க்ருஷ்ணனாய்ப் பிறந்தபோது ருக்மிணியானாள். விஷ்ணுவுடைய மற்ற அவதாரங்களிலும் இவள் (அவனைவிட்டு) அகலகில்லாதவளாயிருக்கிறாள்.]

74. ஸ்திதயா பார்ஶ்வதஶ்சாபி வாலவ்யஜநஹஸ்தயா ।
உபேதம் ஸீதயா பூயஶ் சித்ரயா ஶஶிநம் யதா ॥

[சித்ராநக்ஷத்ரத்துடன் கூடிய சந்திரனைப்போல், சாமரத்தைக் கையில்கொண்டு அருகிலிருப்பவளான ஸீதையுடன் கூடியவனான ராமனை.]

75. தம் த்ருஷ்ட்வா ஶத்ருஹந்தாரம் மஹர்ஷீணாம் ஸுகாவஹம் ।
பபூவ ஹ்ருஷ்டா வைதேஹீ பர்த்தாரம் பரிஷஸ்வஜே ॥

[சத்துருக்களை அழித்தவனும், மஹர்ஷிகளுக்கு ஸுகத்தை அளித்தவனுமான கணவனைப் பார்த்து வைதேஹி உளளானாள்; ஸந்தோஷமுமடைந்தாள். பர்த்தாவான ஸ்ரீராமனை ஆலிங்கனம் செய்துகொண்டாள்.]

சதுःஶ்லோகீ வ்யாக்யாந ப்ரமாணத்திரட்டு முற்றிற்று.

69. ஹரிவம்ஶம் 113-62. 72. ரா-உத் 85-18; 104-9.
73. வி-பு. 1-9-144. 74. ரா-அ. 16-10. 75. ரா-ஆ. 30-40.

சதுச்ச்லோகீ வ்யாக்யாந ப்ரமாண அநுக்ரமணிகை